

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 17

அம்மான்
ஆண்டி
மு. அண்ணாமலை
தில்லை வில்லாளன்
கி. மனோகரன்
சுகி
நக்கீரன்
நா. பாண்டுரங்கன்
வழிப்போக்கன்
விசு. திருநாவுக்கரசு
பழ. சுப. மணியன்
வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
புரட்டாசித் திங்கள் 24-ம் நாள்

விலை அணா 5
10—10—49

மடமையின் ஆட்சி

[தீபாவளியன்று, ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ருக்மணி,பாமா சமேதராய் வீற்றிருக்கிறார். சிறு தெய்வங்கள் ஆடிப் பாடிக் கூத்தடிக்கின்றன.]

தெய்வங்கள்

கொண்டாட்டம் கொண்டாட்டம் தெய்வங்களே —நல்ல
கும்மாளம் போடுங்கள் தெய்வங்களே!
அண்டங்கள் அத்தனையும் கலக்கிவந்த —அசுரன்
அழிந்தநாள் கொண்டாட்டம் ஆடுங்களே!

[அப்பொழுது நாரதர் அங்கே தோன்றுகிறார்]

நாரதர்

நாராயணயநம! பூவுலகில் —உள்ள
நாற்றிசையும் சுற்றிவந்தேன் நாரதனே!
பாரோடு விண்ணையும் ஆட்சிசெய்யும் —எங்கள்
பரமாத்மா ஸ்ரீகிருஷ்ணா! நமஸ்காரம்!

பரமாத்மா

நாரதரே! நாரதரே! வாருமையா! —மிக
நல்லசெய்தி யுண்டானால் கூறுமையா!

நாரதர்

பாரதத்தில் தேவமொழி பயிலுகின்றார் —அதைப்
பார்க்கும்நல்ல பேறடைந்தேன் பரமாத்மா!

ஊருக்கொரு கோயிலுண்டு முன்னாளில் —இன்று
தூணுக்கொரு தெய்வங்கண்டேன் கண்ணாலே —கடல்
நீர்கடந்து செல்லும்தபால் தலைகளிலும் —ஆட்சி
நிகழ்த்தும் தெய்வம் பல கண்டேன் பரமாத்மா!

கீதைதன்னை உலகெங்கும் பரப்பிவரத் —தூரக்
கிழக்காப்ரிக்கா செல்லுமொரு கோஷ்டிகண்டேன் —தெய்வ
மேதையினை இந்தியாவின் ஆட்சியாளர் —மிக
மிகப்பரப்பும் முயற்சிகண்டேன் பரமாத்மா!

கீதைபக்தன், ராஜதந்திரம் மிக்கவனும் —மிகக்
கீர்த்திவாய்ந்த கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார்
ஆதிமனு நீதிதன்னைப் போதிக்கின்ற —நல்ல
ஆர்யங்கண்டு களிப்படைந்தேன் பரமாத்மா!

இந்தியாவில் தீவாளித் திருநாளை —மக்கள்
எல்லோரும் கொண்டாடும் காட்சிகண்டேன்
சந்தேகம் வேண்டாமே மடமைதான் —அங்கே
சாஸ்வதமாய் ஆட்சிசெய்யும் பரமாத்மா!

—அம்மான்



சீனக் குடியரசு

சீனுவில் புதிய குடியரசு தழைத்துவிட்டது; 'அல்லலே எந்நாளும்' என்றிருந்த நிலை மாறிச் சீனமக்களின் நல்வாழ்வுக் கொடி உயர்த்தப்பட்டுவிட்டது. தோழர் மாசிடாங் சீனக் குடியரசின் தோற்றத்தை உலக மக்களுக்கு அறிவித்து விட்டார்.

சீன என்றுல் உள்நாட்டுப் போர் என்று பொருள்படும்படியாகக் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே சீனமக்கள் போரிடையே வாழ்ந்து வந்திருக்கின்றனர். கோமிண்டாங் கட்சியின் தலைவர் சியாங் ஒரு பக்கம்; கம்யூனிஸ்டுகளின் தலைவர் மாசிடாங் மற்ருெரு பக்கம், முதலாளிகள், பாசிச வெறியர்கள், பதவிப் பிரியர்கள், சியாங்க் பக்கம் அணிவகுத்து நின்றனர். ஏழைகள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாசிடாங் படையின் முனனணி வீரர்களாயினர். சியாங் சீனுவின் ஈடு இணையற்ற தலைவர் என்று விளம்பரப்படுத்தப்பட்டவர்; சியாங்கின் புகழ் பரப்பும் பணியைச் சீனப் பத்திரிகைகள் மட்டுமன்றி உலகெங்கணுமுள்ள பத்திரிகைகள் அனைத்துமே மேற்கொணடிருந்தன. அமெரிக்காவின் ஆதரவு சியாங் பக்கம்தான். ஆதரவு என்றுல் வெறும் வார்த்தையளவில் அல்ல. டாலரைக் குவித்தது, அமெரிக்கா. சியாங் வேண்டும்போதெல்லாம் போர்க் கருவிகளை அனுப்பிற்று, அமெரிக்கா. இத்தகைய சூழ்நிலையில் மாசிடாங் எப்படி வெற்றி பேற முடியுமென்றுதான் அனைவரும் எண்ணினர். ஜப்பான் ஆதிக்கத்திலிருந்து மீண்ட சீன, மக்களின் நல்வாழ்வு மன்றமாக விளங்குமென்று மாசிடாங் எதிர்பார்த்தார். ஆனுல் சியாங் பிடியில், சீன முற்போக்கைக் கனவிலும் காணமுடியாதென்று கண்டார். சியாங் ஆட்சியில், சீரழிவைத் தவிர, வேறு பயன் எதிர்பார்க்க முடியாது என்பதைத் தெளிவுற உணர்ந்தார். சியாங் கண்காணிப்பில், சீன, அமெரிக்காவின் எடுபிடியாக அடங்கிக் கிடப்பதைத் தவிர வேறு வழியிராது என்பதை நன்கு புரிந்துகொண்டார். சீரழியும் சீனவைச் செம்மையுறச் செய்யவேண்டுமானுல், சியாங் பிடியிலிருந்து அதை மீட்டாகவேண்டும் என்ற உறுதி பூண்டார். அந்த உறுதியின் விளைவாகவே கம்யூனிஸ்டுகள் கடந்த சில ஆண்டுகளில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றனர்; கோமிண்டாங் குழுவினர் தோல்விக்குப் பின் தோல்வி கண்டனர்.

மிகப் பெரிய நிலப்பரப்பு மாசிடாங் ஆட்சியின் கீழ் வந்து விட்டது; எஞ்சியுள்ள சிறு பகுதியைக் கோமிண்டாங் குழுவின ரிடமிருந்து மீட்பதற்காகப் போர் தொடர்ந்து நடைபெறுகிறது. மிக விரைவில் அங்கிலப் பரப்பும் புதுக் குடியரசின் வசமாகு மென்பதும், சியாங்கின் நிழல்கூடச் சீனுவில் பட மக்கள் ஒருப் படார் என்பதும் திண்ணம்.

இச் சீனப் புதுக் குடியரசின் தோற்றத்தை ரஷ்யா முதலிய நாடுகள் ஏற்றுக்கொண்டு, தத்தம் தூதுவர்களைப் பீகிங் நகரத் திற்கு அனுப்பி வைத்திருக்கின்றன. அமெரிக்காவும், பிரிட் டனும் இந்நிலையில் என்ன செய்யப் போகின்றன என்பது தெளி வாகவில்லை. சீனுவில் அமெரிக்காவும் பிரிட்டனும் நிறைய முதலீடுகள் செய்திருக்கின்றன. அந்த முதலீடுகள் காப்பாற் றப்பட வேண்டுமென்ற அக்கரை அந்நாடுகட்கு இருக்கத் தான் செய்யும். புதுச் சீனு அவ்வகையில் உறுதி மொழி ஏதும் தருமா என்பதும் எதிர்பார்ப்பதற்கில்லை. எனவே பிரிட்டனும், அமெரிக்காவும் 'அங்கீகாரம்' அளிப்பதற்குக் காலங் கடத்துவ தில் பொருளுண்டு. ஆனல் இந்தியா, சீனக்குடியரசைச் சிறிதும் தயக்கமின்றி அங்கீகரிப்பதே நேர்மையாகும். ஆசியாவின் நல னில் அக்கரை கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்ளும் ஆளும் பெரியவர்கள், வெளி நாட்டுக் கொள்கையில் நடுநிலைமை வகிக்க விரும்புகின்ற முறையில், அமெரிக்க, பிரிட்டிஷ் விருப்பு வெறுப் புகளை நோக்காமல், சீனுவை ஏற்றுக்கொள்வதே சரியென்பது நம் கருத்து.

புதிய சீனு, சியாங்கினின்று மீட்சியடைந்ததற்காக வாழ்த்து கிறோம்! உலகெங்கணுமுள்ள பாசிஸ வெறியர்களுக்கு, சியாங் மூலம் நல்லதொரு பாடத்தைக் கற்பித்த, புதிய சீனுவின் தலைவர் மாசிடாங்கைப் பாராட்டுகிறோம்!

மாசிடாங் குழுவினருக்கு வெற்றி கிட்டிவிட்டது. எனினும் அவர்கள் திட்டம் இன்னும் நிறைவேறவில்லை. மக்களுக்கு நல்வாழ்வு தேடித் தரும் நற்பணியை முற்றுப் பெறச் செய்ய வேண்டிய பெரும் பணி அவர்கள் முன்னே காத்திருக்கிறது. தேசியம் என்ற போர்வையில், பாசிசமும் முதலாளித்வமும் கை கோர்த்துக்கொண்டு புரிந்த கோர நர்த்தனத்திற்கு முற்றுப் புள்ளி வைத்த கம்யூனிஸ்டுகளுக்கு, இல்லாமை, போதாமை என்னும் பகைகளை விரட்டியடிப்பது பெரிதல்ல என்றே எண்ணு கிறோம். புது வாழ்வு காண முனைந்து நிற்கும் சீன மக்களுக்கு நம் நல்வாழ்த்தையும் ஆதரவையும் வழங்குகிறோம்.

காலமும் கருத்தும்


அமெரிக்காவிற்கு நேரு

நம் முதலமைச்சர் 'நல்லெண்ணத் தூதுவராக' அமெரிக்கா சென்றுள்ளார். அமெரிக்கா, இந்திய முதல்வரை வரவேற்கப் பெரும் ஏற்பாடுகள் செய்திருக்கிறது. ஏறக்குறைய ஒரு மாதம் நேரு அமெரிக்காவில் தங்குவாரென்றும் தெரிகிறது. 'ரஷ்யாவிலும் அணுகுண்டு இருக்கிறது' என்ற செய்தியை ட்ருமனே வெளியிட்டு மற்ற நாடுகளையும் தன் நாட்டையும் எச்சரிக்கை செய்திருக்கிறார். சீனாவில் கம்யூனிஸ்டுகள் புதுக் குடியரசை நிறுவிவிட்டனர். பிரிட்டன் ஸ்டர்லிங்கின் டாலர் மதிப்பைக் குறைத்து விட்டது. இச்சூழ்நிலையில் பண்டிதர் அமெரிக்காவிற்குப் பயணம் சென்றுள்ளார். அமெரிக்கா இந்தியாவின் ஆதரவைப் பெறத் துடிப்பதில் பொருளிருக்கிறது. ஆதிக்க வேட்டையில் கண்ணும் கருத்துமாயிருக்கும் அமெரிக்கா, சீனாவின் நிலையைக் கண்டபின்னர், இந்தியா பக்கம் தம் கண்ணோட்டத்தைத் திருப்பியிருப்பதில் வியப்பில்லை இந்தியாவில் முதலீடு செய்யும் ஆசை தங்கட்கிருப்பதை அமெரிக்க முதலாளிகள் வெளிப்படையாகக் கட்டிக் கொள்ளுகின்றனர். நேரு சர்க்காரும் உறுதிமொழி கூறி வெளி மூலதனத்தை வரவேற்கக் காத்திருக்கிறது. இங்கிலையில் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கும் நேரு சிறப்பான வரவேற்புப் பெறுவதில் ஆச்சரியமொன்றுமில்லை. இச் சமயத்தில் பண்டிதர் நேரு, காமன்வெல்த் மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது லண்டன் அவருக்கு அளித்த வரவேற்பை நினைவூட்ட விரும்புகிறோம். அவ்வரவேற்பு என்ன பலனளித்தது என்பதை நாம் அறிவோம். காமன்வெல்த்தில் இந்தியா இணைந்திருப்பது என்ற முடிவு அப்போதுதான் உருவாயிற்று. அம்முடிவின் பயனை நாணய மதிப்புக் குறைப்பில் இந்திய சர்க்கார் கண்கூடாகக் கண்டுவிட்டது. அதேபோன்றுதான் அமெரிக்கா நடத்தும் வரவேற்பில் நாம் பெருமை கொள்வதற்கில்லை; அவர்களின் நோக்கம் காரியத்தில், புலனாக வேண்டும். இந்தியாவைத் தங்கள் வேட்டைக் காடாகமாற்ற அவர்கள் எண்ணுவர். 'கம்யூனிஸ ஆபத்திலிருந்து இந்தியாவைக் காப்பாற்ற வேண்டும்' என்று அமெரிக்கா குரல் எழுப்பும் போதெல்லாம், அவர்களின் உள்ளெண்ணம் நமக்குத் தெளிவாகத் தெரியத்தான் செய்கிறது. எனவே தான் நேரு பிரயாணம் புது இக்கட்டுகளை இந்தியாவிற்குத் தேடித்தரக் கூடாது என்று கூற விரும்புகிறோம். விருந்துகளில் கலந்து மகிழட்டும், அவர். அமெரிக்கக் காங்கிரஸில் தம் சொல் வன்மையை உணர்த்தட்டும். பல தொழிற்சாலைகள் சென்று, தொழில் நுணுக்கங்களை உணரட்டும். ஆனால் இந்தியா, அமெரிக்காவின் எடுபிடியாகும் வகையில் எந்த ஒரு திட்டத்தையும் அவர் ஏற்கக்கூடாது என்று மட்டும் எச்சரிக்க விரும்புகிறோம்.

ஆந்திர மாகாணம்

சென்னையைக் கைப்பற்றக் கனவு காணும் ஆந்திரர்கள் தங்கள் ஆத்திரத்தின் விளைவாக ஆந்திரமாகாணப் பிரிவினையையும் தடை செய்து வருகிறார்கள். ஆம், ஆந்திரர்கள் தான் ஆந்திரமாகாணம் உருவாவதற்கு இடையூறாய் நிற்கிறார்கள். அண்மையில் கூடிய காங்கிரஸ் கமிட்டி மீண்டும் 'சென்னை ஆந்திருக்கு இல்லை' என்பதைத் தீர்மானம் மூலம் உறுதிப்படுத்தி விட்டது. மேலும் ஆந்திரர்கள் சென்னை முதலிய தமிழர்கள் வாழும் பகுதிகளின்மீது பாத்தியதை கொண்டாடுவதை நிறுத்திக்கொண்டால் தான் ஆந்திரமாகாணம் நிறுவப்படுமென்றும் அறிவிக்கப்பட்டு விட்டது. நவம்பர் பதினைந்து தேதிக்குள் ஆந்திரர் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். நேரு படேல், பட்டாபி அறிக்கையை அவர்கள் ஒப்புக்கொண்டால் வரும் ஜனவரியில் ஆந்திருக்கெனத் தனி மாகாணம் உருவாகிவிடும்; இல்லையேல் காலதாமதம்தான் பயனாக முடியும்.

இப்பொழுதேனும் பேராசையின்றி நன் முடிவுக்கு ஆந்திரர்கள் வருவாரென்று நம்புகிறோம்.



இந்தியா ரூபாயின் மதிப்பைக் குறைத்துவிட்டது; ஆனால் பாகிஸ்தான் தன் ரூபாயின் மதிப்பைக் குறைக்கவில்லை, இரு நாடுகளுக்குமுள்ள சிக்கல்களில் இப்பிரச்னை புதிதாகச் சேர்ந்திருக்கிறது

"ஒரு ஹிந்து ஹரிஜன், கிறிஸ்தவராக மதம் மாற்றப் பட்டதும், முன் அவருக்கிருந்த சமுதாயக் கொடுமை, அடிமைத் தளைகள் தானே அகன்று விடுகின்றன. சமுதாயத்தில் அவர் கௌரவமாக நடத்தப்படுகிறார். அவருக்கு ஒரு ஸ்தாபனமும் ஏற்பட்டு விடுகிறது."



'ஏது 'பொன்னி'யில் கிறிஸ்தவ மதப் பிரசாரம் வேறு நடத்த ஆரம்பித்து விட்டீர்களா?' என்று தானே கேட்கிறீர்கள். மேலே இருக்கும் வாசகத்தைப் படித்ததும் உங்கட்கு அப்படித்தான் தோன்றும். ஐயன்மீர் வேறு பணி பல உண்டு, எமக்கு. வீணாகச் சமயத்திற்கு ஆள் சேர்க்கும் சழக்கராகமாட்டோம் என்று மட்டும் உறுதி கூறுகிறோம்.

பின், யார் இப்படிச் சொல்லத் துணிவர்? கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களின் சொற்கோவையோ என்று நீங்கள் ஐயுறலாம். உங்கள் ஐயப்பாட்டுக்குக் காரணமுண்டு. ஆனால் மேற்குறிப்பிட்டபடி கூறியவர், கிறிஸ்தவப் பிரசாரகருமல்ல, கிறிஸ்தவருமல்ல, நமது நிதி மந்திரி கோபால் ரெட்டி அவர்கள் தாம் இப்படித் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

நீங்கள் நம்பமாட்டீர்கள்! ஏதோ, நான் இட்டுக்கட்டுகிறேன் என்று வாதம் புரிவீர்கள்! ஆனால் நான் சொல்வது என்னவோ உண்மை. பாளையங்கோட்டையில் இந்திய கிறிஸ்தவர் கூட்டத்தில் தான் நிதியமைச்சர் இவ்வாறு புகன்றுள்ளார். பத்திரிகையில் செய்தி வந்துள்ளது, அதனை ஆதாரமாகக் கொண்டு தான் தீட்டுகிறேன்.

உங்கள் கண்களை அகல விரித்துப்பார்க்கிறீர்கள்! 'ஆச்சரியம்! ஆச்சரியம்!' என்று உங்கள் வாய் உங்களையறியாமல் முணுமுணுக்கிறது. 'வரி போடுவதோடு நிற்காமல், இந்த மனிதர் கிறிஸ்தவ மதப் பிரசாரம் வேறு செய்கிறாரே' என்று நொந்து கொள்கிறீர்கள்.

மீண்டும் படித்துப் பாருங்கள், அந்தப் பொன்னுரையை! படித்தீர்களா? அதன்படி ஒரு ஹிந்து ஹரிஜன் . கிறிஸ்வத மதத்திற்கு மாறுமுன், சமுதாயக் கொடுமைகள் அடிமைத் தளைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார். சமுதாயத்தில் அவர் கௌரவமாக நடத்தப்படுவதில்லை. அவருக்கென்று ஒரு ஸ்தாபனம் இல்லை என்றாகிறதல்லவா?


இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஹிந்து மதத்தில் ஹரிஜன் அடிமையாக நடத்தப்படுகிறான், மதம் மாறியவுடன்தான் அவன் சுதந்திரமடைகிறான் என்னலாம். அதாவது ஹிந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறினால்தான் ஹரிஜனங்கட்கு விமோசனம் என்றாகிறது

இந்நிலையைக் கனம் நிதியமைச்சரே வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார். 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்று பாடிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியினர் இந்நிலை மாற்றத்திற்கு என்ன செய்தனர்? இந்து மதத்திலிருந்தபடியே, ஹரிஜனங்கட்குச் சமநிலைவரும்படி சட்டமியற்றக்கூடாதா? கோயில் நுழைவுச் சட்டம், நிறைவேற்றியிருக்கிறோம், என்பர். ஹரிஜன முன்னேற்றத்திற்காகக் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கிறோம் என்று பதில் வரும். சட்டம் நிறைவேறிற்று; பணம்

செல்வழிந்தது. அவ்வளவுதான். ஹிந்து ஹரிஜன் சமுதாயக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுத்தான் வருகிறார்; மதம் மாறினால் தான் அவர் நிலை உயர்கிறது.

இதுதான் உண்மை. கசக்கிறதா? உண்மை என்னவோ கசக்கத் தான் செய்யும்.

நிதியமைச்சர் 'இனி வரியே கிடையாது' என்று உறுதியளித்திருக்கிறார். உங்கள் அகமும் முகமும் மலருகிறதல்லவா? அம்பாசமுத்திரத்தில் பேசும்போது கனம் கோபால் ரெட்டி, அடுத்த தேர்தல் நடந்து புதுமந்திரி சபை அமைக்கும் வரை இனிப் புதுவரி போடப்போவதில்லையென்று குறிப்பிட்டுவிட்டார். நல்ல செய்திதான். ஆனால் விளம்பரவரியைப் பற்றி வந்துள்ள செய்தி இன்னும் நமக்கு ஐயத்தைக் கிளப்புகிறது. பெரும் சச்சரவுகள் நடத்தி, பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதி, பிரதமரும், மற்ற அமைச்சர்களும் காரசாரமாகப் பேசி அமுலுக்கு வரவிருந்த விளம்பரவரி, கைவிடப்பட்டு விட்டதாம்! மத்திய சர்க்கார் வரி இனங்களில் விளம்பர வரி சேர்க்கப்பட்டுவிட்டதால் தான் இந்த முடிவு. கனம் கோபால் ரெட்டி எவ்வளவோ முயன்றும் பத்திரிகைக்காரர்கள் பக்கம் தான் வெற்றியாயிற்று. எனவே தான் இனி எந்த வரியும் போடுவதில்லையென்று திட்டமான முடிவுக்கு வந்துவிட்டார் போலும்! வரியைப் போடுவதாகச் சொல்வது, செலக்ட் கமிட்டி பரிசிலனையின் போது, பத்துப் பொருளுக்கு வரியென்றால் எட்டுப்பொருளை வேண்டாமென்று நீக்கி விடுவது, அப்படியும் தவறிப்போனால் மத்திய சர்க்கார் வரி இனத்தில் சேர்த்துக் கொள்வது இந்தக் கேலிப்பிழைப்பு இனியும் வேண்டாமென்று அவர் தீர்மானித்தது பாராட்டப்பட வேண்டியதொன்றேயாகும்.



ரஷ்யா அணுக்குண்டு பரிசோதனை நடத்திப் பார்த்ததாக அறிவித்து விட்டு அமெரிக்கா அணுக்குண்டுகளை அதிகமாக உற்பத்தி செய்வதில் முனைந்து நிற்கிறது.

விமரிசனம் கண்ட பயன்

புத்தகச் சந்தையிலே மலைமலையாகக் குவியும் புத்தகங்களைக் கண்டு வாசகர்கள் மயங்கி நிற்பதாகவும் அவர்கள் முன் நின்று 'நல்ல புத்தகம் இது' 'கெட்ட புத்தகம் இது' என்று தெரிந்து கூறிவிட்டால் வாசகர்கள் மூர்ச்சையாகி விடுவார்கள் என்றும் தங்கள் திருத்தொண்டைப்பற்றி இவ் இலக்கிய விமரிசகர்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். ○○○

மு. அண்ணாமலை

மேனாடுகளில் இலக்கியவிமரிசனம் ஒரு தனிக் கலையாக வளர்ந்து கொண்டு வருகிறது என்பர். அப்படியானால் அதற்கென அமைந்த வரலாற்றையும் அது சாதித்த பயன்களையும நோக்க வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் அது தனிக் கலை என்ற பெயரில் வளரவில்லை; இருந்ததா என்பதே ஐயப்பாட்டிற் குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது.

திருவிளையாடற் புராணத்திலேஒரு கதை. இறைவன் புலவர்களின் வரிசையையும் திறமையையும் அறிவதற்காகச் சங்கப் பலகை ஒன்று ஈந்தாராம். அது போலிப் பாவலர்களுக்கு இடம் கொடுக்காமல் சிறந்த புலவர்களுக்கு முழம் வளர்ந்து இருக்கை நல்குமாம். இவ்வாறு மூளைக்கு வேலையில்லாமல் இலக்கிய விமரிசனம் அந்தக் காலத்தில் ஈடேறிக் கொண்டிருந்தது. ஆண்டவன் அருளைக் கொண்டு தாரதம் கண்டுபிடிக்கும் அருமையான கருவியை நாம் இப்பொழுது அடைய வழியில்லை. ஏனென்றால் நாமெல்லாம் கலியுகப் பிராணிகள் தாமே! ஆண்டவனை நம்புவதைக் காட்டிலும் அறிவை நம்பினால்தான் பலனுண்டு என்ற மோசமான

நிலைக்கு வந்துவிட்டோம். இன்று ஆண்டவனே நம்மிடம் வந்து, 'அந்தச் சங்கப் பலகையை உங்களுக்குத் தருகிறேன்', என்று சொன்னால்கூட 'வேண்டாம்' என்று மறுத்துவிடுவோம். சங்கப் பலகை உயிரோடு இருக்கிற இலக்கிய கர்த்தாக்களின திறனைத்தான் தெளிவிக்கும பத்துப பாட்டிலிருந்து 'பாரதி பாட்டு' வரை கலித்தொகையிலிருந்து 'கர்ண மகாராசன் சண்டை' வரை அகநானூற்றிலிருந்து 'அல்லி யரசாணி மாலை' வரை நம் முன்னிலையில் புத்தகங்கள் குவிந்து கிடக்கின்றன; குவிந்து கொண்டு வருகின்றன, இந்நூல்களின் ஆசிரியர் பலர் உயிரோடில்லை. பலகையைக் கொண்டு இறந்தபாவலர்களின் திறனை எவ்வாறு தெளிந்து கொள்ளக் கூடும்!



பிரயாணி:- புதுத்தெருவுக்குப் போக என்னய்யா, கேட்கிறே!

குதிரைவண்டிக்காரன்:- (ஞாபக மறதியாக) பார்த்துக் கொடுங்க. புண்ணாக்கு, பருத்திக்கொட்டை விலை யெல்லாம் ஏறிப் போச்சுங்க

பிரயாணி:- ஏம்பா, உன் குதிரை, புண்ணாக்கு, பருத்திக்கொட்டை எல்லாம் தின்னுமா?

வண்டிக்காரன்:- மறந்திட்டேனுங்க, நேற்றுவரைக்கும், மாட்டு வண்டிதான் ஓட்டினேன், அந்த ஞாபகம்

தமிழ்மொழியிலே இலக்கிய விமரிசனத்திற்கு வரலாறு காணப்புகுந்தால், பலகை முழம் வளர்ந்த கதை, ஊமை கண்ணீர் விட்டு நூல் நயம் கண்ட கதை, வில்லி காதறுத்த கதை, தலையில் எழுத்தாணி குத்திக் கொண்ட கதை - ஆகிய இந்தக் கதை மூட்டைகளின் சாலடியில்தான் விழவேண்டியவர்களாக இருக்கிறோம்! இவை எப்படியானாலும் ஆகட்டும் இந்தக் கலையின் வரலாற்றை அறிய மேனாட்டு இலக்கியங்களைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஃ ஃ ஃ

இந்தக் கலைஞர்கள் தங்கள் கலையின் நோக்கத்தைப் பலப்பலவாக விரித்துரைக்கின்றனர். 'மொழி எப்படி வளருகிறது என்பதைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்' என்று சொல்கின்றனர். புத்தகச் சந்தையிலே மலைமலையாகக் குவியும் புத்தகங்களைக் கண்டு வாசகர்கள் மயங்கி நிற்பதாகவும் அவர்கள் முன் நின்று 'நல்ல புத்தகம் இது' 'கெட்ட புத்தகம் இது' என்று தெரிந்து கூறவிட்டால் வாசகர்கள் மூர்ச்சையாகி விடுவார்கள் என்றும் தங்கள் திருத்தொண்டைப் பற்றி இவ்விலக்கிய விமரிசகர்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். உண்மையில் அவர்கள் சாதனையும் அப்படித்தான் இருந்துகொண்டு வந்ததா? இன்று உலக மகா கவிஞர்களாகக்

கருதப்படும் பல பாவலர்களின் வாழ்க்கை இக்கலையோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தது என்று பார்த்தால் நாம் ஒருவாறு அவர்கள் சாதனையின் தன்மையைப்புரிந்து கொள்ளலாம்.

'வேர்ட்ஸ் வொர்த்' என்னும் ஆங்கிலக் கவிஞரைப்பற்றிய ஒரு புத்தகத்தைப் படித்தேன். அதில் அவரைப் பற்றியும், அவரது கவிதைகளைப்பற்றியும் ஒவ்வொரு ஆண்டிலும் இலக்கிய விமரிசகர்கள் எப்படிக் கூறிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று காட்டப்பட்டிருக்கிறது. 'ஓசை நயம் இல்லை; வெறும் சொற்கூடுகள்' என்றெல்லாம் விமரிசனங்கள் முதலில் கூறின. பின்னர், நாள் ஆக ஆக 'இயற்கையன்னையே அவருக்காக நின்று கவிதை எழுதினாள்' என்று இலக்கிய விமரிசனத்தின் புகழ் மாலைகள் விழத்தொடங்கின.

வால்ட் விட்மன் என்பவர் அமெரிக்கக் கவிஞர். அவர் கவிதைகளை, யாப்புக்குக் கட்டுப்படாமல் எழுதினார். அவரது கவிதைத் தொகுதியாகிய "புல்லிதழ்கள்" (*Leaves of grass*) 1855-ல் வெளிவந்தது. வெளிவந்தவுடன், வாசகர்களின் மயக்கத்தைத் தீர்த்து வைக்கும் விமரிசகர்கள் 'அது மொழிக்கே ஆறாத் தீங்கைத் தரும் வெடிகுண்டு இலக்கியம்' என்று கருதினர். பிரசாரம் செய்தனர். பலமான எதிர்ப்புக் கிடையிலே புத்தகம் விற்பனையாகிக் கொண்டுதானிருந்தது. ஆனால் இன்றைய இலக்கிய விமரிசனம் அது மிக உயர்ந்த இலக்கியம் என்று கருதுகிறது. புதுமை உடையது என்று புகலுகிறது. உலகமகா இலக்கியமாகும் திறனும், நிலைத்து நிற்கும் வலிவும் அதற்குண்டென்று கூறுகிறது. 1855-ல் இருந்தது எந்தப் புத்தகமோ அதே புத்தகம் தான் 1949 லும் இருக்கிறது. அதே வால்ட் விட்மன்தான் ஆசிரியர். ஆனால் இலக்கிய விமரிசனங்கள் மட்டும் மாறிக் கொண்டு வந்திருக்கின்றன — இல்லை — தோல்வியடைந்து கொண்டு வந்திருக்கின்றன!

உலகத்திற்கு, இங்கிலாந்து அளித்த பெரும் பரிசாகக் கருதப்படும் ஷேக்ஸ்பியரைப்பற்றியும் இதே கதை தான். இந்த நாட்டில் பாரதியின் கதையும் இதை ஒப்பதே! பாரதியைப் பற்றி இருபது ஆண்டுகளுக்கு முன் நிலவிய விமரிசனமும், எண்ணமும் வேறு. இப்பொழுது நிலவுவது வேறு. இனி அவரைப்பற்றி ஏற்படப் போகும் முடிவான கருத்தும் வேறாகத்தான் இருக்கும். வேண்டுதல் வேண்டாமை இரண்டும் ஒழிய, இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின் பாரதிக்கு அளிக்கப்படும் இலக்கிய பீடம் எதுவோ அதுவே நிரந்தரமானது.

புத்தகங்கள் தோன்றும் காலத்தில் எழும் இலக்கிய விமர்சனங்கள் பெரும்பாலும் சரியாக இருப்பதில்லை. இலக்கிய விமரிசகர்களுக்குத் தீர்க்க தரிசனம் இருப்பதில்லை! இதை தான் இலக்கிய விமரிசனத்தின் வரலாறு காட்டுகிறது. எனவே படிப்பவன் தன் சொந்த அறிவையே எப்பொழுதும் நம்பியிருக்க வேண்டும். இக்கலையின் நோக்கம் வாசகனின் மயக்கத்தைத் தீர்ப்பதா

கச் சொல்லப்பட்டாலும் இக்கலையின் வரலாறு அவ்விதம் கூறுவதில்லை. ஒரு காலத்திலே உதறித் தள்ளப்பட்டவை, உருப்படாத இலக்கியம் என்று கொள்ளப்பட்டவை, தவறு மலிந்திருப்பதாகச் சொல்லப்பட்டவை திடீரென்று உலக மகா காவியங்களாக ஆனதெப்படி? இந்த 'ஜீவரகசியம்' இலக்கிய விமரிசனத்தின் தோல்வியிலே அடங்கியுள்ளது.

காவியம் என்றும் போல் உள்ளது. அது மாறவில்லை. அன்றைக்கிருந்த அதே இலக்கியம் இன்றும் இருக்கிறது, ஒன்றிரண்டு பாடபேதங்கள் தவிர. ஆனால் அது பற்றிய விமரிசனங்கள் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. இலக்கியம் நிலையானது. இலக்கிய விமரிசனம் அழிந்துகொண்டே இருப்பது. விமரிசகனின் புகழ் கால வேறுபாட்டின் கோரப் பார்வைகட்கு ஆளாவதாகும். அரிஸ்டாட்டில் 'கவிதை' பற்றிக் கொண்ட கொள்கையை இன்றைய விமரிசகர்கள் ஒப்புக் கொள்வதில்லை. காலத்திற்கேற்ப விமரிசனத்தின கொள்கைகள் மாறிக்கொண்டிருப்பதால் விமரிசகர்களும் விமரிசனங்களும் காலங்கடந்து நிற்க முடிவதில்லை.

இக்கலையின் வரலாற்றில் உண்மை இலக்கியங்களை மறைப்பதும், போலிக்கு 'மார்கெட்' டிலே இடம் தேடிக் கொடுப்பதும்தான் வேலையென்றாலும், இலக்கியத்திற்கு ஒரு பக்கம் இதனால் வட்டமும் மனித சிந்தனைக்கு விரிவும் கிடைத்து வந்திருக்கிறது என்பது என்னவோ உண்மைதான். இலக்கியத் துறையில் ஏதோ கலவரம் இடம் பெறுவதால், கலகலப்பும், குழப்பம் காரணமாகக் கொஞ்ச நாள் முன்னதாகவோ, பின்னதாகவோ தெளிவும் ஏற்படுகிறது. நாடெங்கும் இலக்கிய வாதங்களை ஏற்படுத்துவதால் இலக்கியத்திற்கு வளர்ச்சி ஏற்படுகிறது.

இக்கலையின் வரலாற்றிலே சோகக்கறை படிந்திருக்கக் காரணம் உண்டு. எந்தக் கலைக்கும் தேவைப்படாத நேர்மை இதற்கு வேண்டும். வெறும் நேர்மையோடு பேசிக்கொண்டிருக்கும் இலக்கிய விமரிசகன் தனக்கென ஒரு கூட்டம் அமைத்துக் கொள்ளமுடியாமல் தன எழுத்துக்களைக் குப்பைக் கூடைக்கு அனுப்ப வேண்டி வந்து விடலாம் இது காரணமாகவே ஒரு சார்பான போலி விமரிசனங்கள் நிகழுகின்றன. எனினும் நேர்மை நின்று வெல்லும். நேர்மைக்கும் மேலாகத் தீர்க்க தரிசனம் அல்லது எதிர்நோக்கும் ஆற்றல் வேண்டும். அதனினும மேலாகப் பரந்த அறிவு வேண்டும. இலக்கியத்தை ஆக்குகிறவனுக்குப் பரந்த நூலறிவு இருக்கத்தான் வேணடுமென்பதில்லை, இருந்தால் துணை செய்யும் என்பதைத் தவிர. விமரிசகனுக்கோ அது இருந்தே தீரவேண்டும். பரந்த அறிவினும் மேலாக எதைப் பற்றியும் சரியான முடிவுக்கு உடனே வரும் திறமை வேண்டும். இவையனைத்தும் பல விமரிசகர்களிடம் ஒருங்கே அமையாத காரணத்தால், புத்தகச் சந்தையிலே மயங்கி நின்றிருக்கும் வாசகன் மயங்கிய படியே நின்று கொண்டிருக்கிறான். மயக்கம் மூர்ச்சையானதைத் தவிரக் கண்ட பயன் ஒன்றுமில்லை.



ஐந்தாம் அத்தியாயம்

கொல்லவுந் துணிந்தான்!

"அப்பா, அவர் வந்திருக்கிறார்!"

என்று குதித்துக் கூத்தாடினாள் ஊர்மிளா.

"யாரம்மா......" என்றான் அமீன்சந்த்.

"அவர்தானப்பா..."

"முடீன்கானா...!"

"ஆம். அப்பா, அவரது தாடியும், மீசையும்......என்ன வேடிக்கை!"

"என்ன.........மாறு வேடத்திலா?"

"உங்களைக் கூடக் கேட்டாரே...பார்க்க வில்லையா?"

"ஆகா, பார்த்தார்...!"

என்று அழுத்தமாகக் கூறி நிறுத்தினான் அமீன்சந்த். அவனது எதிரி.........அவன் கையில் சிக்கியிருக்கிறான்! விட்டு விடுவதா? கூடாது......இந்த மாதிரிப் பொன்னான வாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்காது. அவனை ஒழித்து விட்டால் அச்சத்தைத் துச்சமெனத் தள்ளிவிட்டு எதையும் எந்த நேரத்திலும் துணிந்து செய்யலாம்!...ஆனால் ஊர்மிளா அவனுக்கு ஒரு சிறு துன்பம் செய்யவும் விடமாட்டாள்...அவளையும் ஏமாற்ற வேண்டும். அவளை மட்டுமா? சுபேதாருக்குத் துளியும் சந்தேகமில்லாமல் இந்தத் துணிகரமான செயலில் இறங்கி விட்டால் பிறகு வெற்றி அமீன்சந்துக்கே! 'நரி வாழ்க. நயவஞ்சகத்திற்கு ஜே' .... கூட்டத்திற்கு வெற்றி மாலை...ஆளப்பிறந்ததாக வீர வுரை யாற்றும் இந்த மொட்டைத் தலையர்களுக்குச் சாவோலை......இப்படி எண்ணினான்!

"அம்மா, முடீனை வரவேற்போம்...ஆனால் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்! எனக்கு அவன் யாரென்று தெரிந்து விட்டது என்பதை மட்டும் அவனிடம் சொல்லக்கூடாது!"

"சரி......அப்பா"

குதிரையிலிருந்து இறங்கி வந்தான் முடீன். அமீன்சந்த்

எழுந்து வந்தே வணக்கம் செலுத்தி அழைத்துச் சென்ருன்.

"வெள்ளை நரிகள் வாலை ஆட்டுகின்றன!"

"பரம்பரைப் பழக்கம் அது... ஆத்திரப் படாதீர்கள்! சுபே தாரிடம் சொல்லி நல்ல சூடு கொடுக்கச் செய்யுங்கள்!"

"மண்டை கிழியக் கிழிய அடித்து விரட்ட வேண்டும்... ஆணவக்காரர்கள் .... நாட்டின் அண்ணல் சுபேதாரின் ஆணையை அவமதிக்க எவ்வளவு துணிச்சல் ... நாடோடிப் பயல்கள்!"

"நல்ல பாடங் கற்பிக்க வேண்டும்"

அமீன்சந்த், ஆத்திரத்தில் எண்ணெயை வாரி வாரி ஊற்றினுன். பிறகு அவன் விருந்து படைத்தான் வெகு ஆடம்பரமான முறையில்...பிறகு ஊர்மிளா வந்தாள் சிரித்தபடி! முடின் ஒருவருக்குந் தெரியாமல் கை சைகையினுலேயே தன்னை யாரென்று காட்டிக் கொடுத்துவிட வேண்டாமென்று குறிப்பாலுணர்த்தினுன். அவளும் கண்ணுலேயே விடை சொனனுள். பிறகு பேசி மகிழ்ந்தனர். இரவும் வந்தது!

நல்ல இருட்டு.........முடின் தன்னை யாரோ அழுத்துவது போல உணர்ந்தான். பிடியை உதறிக்கொண்டு எழுந்துவிட்டான். பக்கத்தில் அடக்கமான அளவில் எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டிவிட்டான்...என்ன சொல்லட்டும்!...அவனைக் கொல்ல உருவிய வாளுடன் ஒரு குண்டன் நின்று கொண்டிருந்தான். முடின் வேடத்திலே வியாபாரி ...வெற்றிகண்ட வீரனல்லவா உண்மையில்? தடியனைத்தாக்கினுன். பிறகு இருவருக்கும் வெகு நேரம்வரை பெரும் போராட்டமே நடந்தது......... போராடும்பொழுது மிகத் தாழ்ந்த குரலில் "ஐயோ அப்பா" என்று அவதிக்குரல் கேட்டது. கடைசியில் கொல்ல வந்த குண்டனைக் கொன்றே போட்டான் முடின். பிறகு ஓடி அந்த மாளிகை முழுவதும் சுற்றிப் பார்த்தான்.

ஒரு அறையிலே அமீன் சந்த் கட்டுண்டு கிடந்தான். அவன் விழிகள் பிதுங்கிவிடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தன ... ... அவன் நெஞ்சை அப்படி யாரோ அழுத்தியிருக்க வேண்டும்! உடனே கட்டுகளை அவிழ்த்து விட்டான். அவன் எதையும் கூருமல் உள்கட்டுக்கு ஓடினுன்.

"ஐயோ......கொள்ளைக்காரர்கள். வெள்ளைக்கார வெறியர்கள். பெண்களை என்ன கதியில் விட்டிருக்கின்றனரோ?"


என்று புலம்பினுன்.

"ஏன்...இப்படிச் செய்தார்கள்?"

"உங்கள் தூது எங்கள் வீட்டிற்கு எமதூதாகி விட்டது?"

"என்ன துணிகரம்......"

பிறகு பெண்கள் தங்கியுள்ள விடுதியில் நுழைந்தால் அங்கு ஒரே அலங்கோலம்......நளினி வாயில் துணியடைக்கப்பட்டுக் கிடந்தாள். ஊர்மிளா மூர்ச்சை யிழந்தே கிடந்தாள்! முடின் முகம் மிகவும் பதட்டத்தைப் படமெடுத்துக் காட்டிற்று.



ஊர்மிளாவின் அருகில் நெருங்கினான். அப்பொழுது அதன் எதிரிலுள்ள சாளரத்தில் இரண்டு கண்கள்...... மூடன் பார்த்துவிட்டான்!

"ஐயா... நான் வருகிறேன்... சுபேதார் படையுடன் வருவார் என்பதை நிச்சயமாக நம்பும்!"

என்று கூறிக்கொண்டே வெளியில் சென்றான்.

ஒளிந்திருந்தவன் யாரென்று கண்டு பிடிக்க ஓடினான். அந்தக் கள்ளனும் குதிரை யேறித் தப்பிவிடலாம் என்று மனப் பால் குடித்துக் கொண்டோடினான்... மூடனா விடுவான்? கொஞ்ச தூரத்திலேயே வளைத்து விட்டான்! அவனைக் குதிரையிலிருந்து கீழேயே தள்ளி விட்டான். அவன் பயந்து நடுங்கிப்போனான். அவன் தலைமயிரைப் பற்றி யிழுத்துக் கொண்டு வந்தான் மூடன்.

"நீ யாரடா...?"

"நான்........."

என்று இழுத்தான்.

அவன் முகத்திலே ஒரு குத்து விட்டான். கன்னங்கள் வீங்க வீங்க அடித்தான்.

"ஐயோ... சொல்லி விடுகிறேன்!"

"சொல்லடா கள்ளா..."

"கொள்ளையிட......"

"கொள்ளையிட மட்டுமா..."

"கொலையும் செய்ய......"

"யார் ஏவி விட்டார்கள்?"

"......................"

மீண்டும் அடி, உதை, குத்து ....

"எங்கள் எஜமான் அமீன் சந்த்..."

"ஆ........"

அமீன்சந்த் அங்கே தன் கபடநாடகம் வெற்றிபெறு விட்

டாலும், வெளியில் உண்மை தெரியாமல் முடிந்து விட்டது என்று சோணிசந்திடம் தோல்விக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான். இங்கோ அவன் சூது வெளியாகிவிட்டது! அவன் சூதால் வாழ்ந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். அந்தச் சூதே அவனுக்கு எட்டடிப் பள்ளத்திற்கு ஏற்பாடு செய்கிறதென்பதை உணரவில்லை.

ஆறாம் அத்தியாயம்

கம்பெனிக் கோட்டை

மிகப் பெரிய மேஜை — அதில் அந்திப்பொழுதுக்கு அருந்துவதற்கெனப் பான வகைகள் பல வைக்கப்பட்டுள்ளன. பெயர்கூடச் சொல்ல முடியாத அளவு பல நிறங்கொண்ட பாட்டில்கள் நிறைந்திருந்தன. தட்டுகளில் பல வகையான தின்பண்டங்களை வைக்க மறக்கவில்லை அந்த 'பட்லர்!' அவன் வெள்ளையுடை பூண்டு இங்கும் அங்கும் ஓடிப் பரிமாறிக் கொண்டிருந்தான்.

அது ஒரு ஓட்டல், உணவுக் கடை!

கல்கத்தாக் கோட்டையில் வேலை செய்யும் பணியாளர்களெல்லாம் மாலை நேரங்களில் அங்கு வந்து பானம் அருந்துவார்கள். அன்று வழக்கம் போல பெரிய வணிகத் தலைவர்கள் மாடியினுள் நுழைந்தார்கள். டிரேக், ஹால்வெல் மின்சின் இன்னும் பலர் வந்திருந்தனர். மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டே தட்டுகளிலுள்ள மாமிசத் துண்டங்களுடன் தங்களது கொரிக்கும் இருப்புப் பற்களால் சண்டையிட ஆரம்பித்து விட்டார்கள்.

டிரேக் மட்டும் ஒரு கோப்பை மதுவுடன் தனியான ஒரு இடத்தில் நின்றுகொண்டு யோசித்தான். சிறிது நேரத்திற்குப் பின்னால்! அவன் சிந்தனை ...?...... இந்தக் கருப்பர்களின் தொல்லை பொறுக்க முடியவில்லை! ஆமாம், ஆமாம்... ஒரு வாரத்திற்கு முன் எவனோ ஒரு வியாபாரியாம், இரகசியத் தூதாம், அமீன்சந்த் சிபார்சாம! மகா வேடிக்கை... விடையில்லாமல் விரட்டியதுதான் விவேகமான வேலை......அமீன் சந்த் ஒரு நரி- அவன் வேலையோ அது?... அவன் தான் கிஷோனிதாஸைக் கொண்டுவர ஏற்பாடு செய்தான்...பிறகு சுபேதார் கட்டளையைச் சுமந்து வந்து நிற்கிறான். அதுதான் போகிறதென்றால் கோட்டையைப் புதுப்பிக்கக் கூடாதாம் ...அடுத்த தாக்குதல்!...டிரேக் கையிலேந்திய கோப்பையின் வழியாக 'டான்ஸிங் ஹால்'— நாட்டிய அரங்கம் தெரிந்தது. கிஷோனிதாஸ் — லூஸி இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு குடி வெறியுடன் வட்டத்திற்குள் நுழைந்தார்கள்! அதைப்பார்த்தான்...... அவன் மனத்திலே புதுவித எண்ண அலைகள்......அமீன் சந்த் ஏன் இவனை அழைத்து வந்தான்? இவனால் யாருக்கு நன்மை? கிஷோனிதாஸ் மாண்ட டாக்கா நகரத் தலைவரின் சொத்துக்களை, பொருள்களைக் கொண்டு செல்கிறான்.



அவனை மடக்கினால் சுபேதாரின் கோபம்...... கோபத்தால் யாருக்கு இலாபம்?... நம்மீது பாய்வான்!... நம்மிடம் படையில்லை. பணம் சண்டையிடுமா? ...அமீன்சந்த் நம்மை மாட்டிவிடத்தான் இப்படி முயற்சி செய்கிறானோ? இல்லாவிட்டால் ...சுபேதார் கையொப்பமிட்ட கடிதம் அவன் வழியாக வருவானேன்?...வந்தவன் மாறுவேடக்காரன். பொருந்தாத பொய்த்தாடி காட்டிக் கொடுத்துவிட்டதே!......அமீன்சந்த்தை எப்படி நம்புவது? அவன் கருப்பன். முழுதும் நம்பக்கூடாது! ஸிராஜ் முரடன். என்ன செய்யப் போகிறான்? கிஷோனிதாஸை விரட்டி விட்டால் மட்டும் அடங்கி விடுவானா?...... கோட்டை புதுப்பிப்பு கூடாது என்று மறு அம்பு!... எப்படியாவது வம்புக்கிழுக்கிறானா?... இப்படி எண்ணினான்.

கையிலிருந்த மதுக்கிண்ணம் காலியாகி விட்டது. இந்தச் சமயத்தில் யாரோ இருவர் மாடியேறி ஓடி வந்தனர். மூச்சு வாங்க வாங்கக் கூவினர்.

"காசிம் பஜார்க் கோட்டையைச் சுபேதார் பிடித்து விட்டார். எதிர்ப்பில்லாமல் பணிந்து விட்டனர். காசிம் பஜாரிலிருந்து முகலாயப்படை கல்கத்தாவை நோக்கி விட்டது. வெகு வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது. குடிப்பது போதும். குடி கெட்டு விட்டது. புறப்படுங்கள்...அவசரம்... அவசரம்!" என்று கூவினர்.

ஓட்டல் முழுவதும் ஒரே குழப்பம்...... அவரவர்கள் ஓட்டமும் பெரு நடையுமாய் வீடு நோக்கி விரண்டோடினர், சிலர் தங்கள் மனைவிகளைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டோடினர்: சிலர் குடிவெறியில் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டே சென்றனர். சிலர் கோப்பைகளை வீசி விட்டோடினர். நாட்டிய அரங்கம் எரிமலை

பாம்பே நகாம் போலாகி விட்டது.

ஒரு சில துரைமார்கள் மட்டும் நின்று கொண்டிருந் தனர்.

"என்ன நடந்தது?"

ஏககாலத்தில் எல்லோரும் கேட்டார்கள். எதிரில் நின்று கொண்டிருந்த மானிங்ஹா மும், பிராங்லண்டும் சட் டென்று விடைகூறினர்.

"கதை கேட்கவா நிற்கிறீர் கள்?... உடனே படையைத் தயார் செய்யுங்கள்...... எதிரி கள் வந்துவிட்டார்கள்......... கணத்திற்குக் கணம்...... மூச் சுக்க... மூச்சு... முன்னேறி வருகிறார்கள் முகலாயர்கள். அங்கிருந்து அடிபட்டு, உதை பட்டு உதை தாங்காமல் ஓடி வந்த இரு சிப்பாய்கள் தந்த செய்தி இது.. வெள்ளையர்களை... அப்பாடா பயமாயிருக்கிறதே! கண்ட கண்ட இடங்களில் துண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்துகிறார்களாம்...... வீடு களில் நெருப்பை வைத்து விலாநோகச் சிரிக்கிறார்களாம் நம்மவர் வெந்து தணிவதைப் பார்த்துப்பார்த்து!......நெஞ்சு படபடக்கிறது ...... போவோம் வாருங்கள்."

டுமில், டுமில்......

அதோ எதிரிகள் வந்து விட்டார்கள். பீரங்கிச் சத்தம் கேட்கிறது!

அங்கிருந்து எல்லோரும் பரபரப்பாக நடந்து வெளி யேறினார்கள். அந்த ஒட்டல் ஒரே அமர்க்களமாகக்கிடந்தது.

(தொடரும்)

பாரதிதாசன் பரம்பரை



தோழர். கி. மனோகரன் அவர்களின் ஊர் நாகர்கோவிலை அடுத்த கோட்டாறு. மலையாள மாணவராகிய இவர் தன்மான இயக்கப்பற்றும் தமிழார்வமும் உடைய இளைஞர்.

—ஆசிரியர்

செல்வதெங்கே?

காதலுளம் எங்கள் உளம்
கவலையிலா வாழ்வு!
சாதலில்லை! சாதிவெறி
சமயச்சதி யில்லை
பேதமில்லை; வாழ்வினிலே
பிணக்குகளு மில்லை
வாதமில்லை; மனத்தினிலே
வாதனையு மில்லை.

கனல்பிழம்பாய்க் காட்டும்விழி
குளிர்நிலவாய் மாறும்
கனல்மொழியாள் வாயூறும்
தேனருவி யுண்டு!
தனைமறந்தே தகதகெனத்
தலைசுழற்றும் உள்ளம்
எனையணைந்தாள் முயக்கினிலே
ஏறியெழும்! வாழும்!

செங்கரும்பை வாங்கிவரச்
சொன்ன நினைவின்றித்
தங்குமிடம் வந்தவனைத்
தையலவள் கேட்டாள்,
'செங்கரும்பை வாங்கிவரச்
சொன்னதெங்கே?' யென்று
'செங்கரும்புன் இதழிருக்கச்
செல்வதெங்கே?' என்றேன்.

படுக்கையும் படிப்பும்

சுகி

பிரபல கண் வைத்தியர் ஒருவர் 'யாரும படுத்துக் கொண்டு படிக்கக் கூடாதென்று' எழுதியிருந்தார். இப்படி எழுதியதை நான் 'சாய்வு நாற்காலியில்' படுத்தபடியே படித்துக் கொண்டிருந்தேன். அடடா...எவ்வளவு ஆண்டுகளாகப் படுத்துக் கொண்டே படித்து வந்திருக்கிறோம். நமக்குத் தப்பென்று யாரும் சொல்லவில்லையே! எனக்கு மேலே படிக்க முடியவில்லை. கண் வலிப்பது போலவும், எழுத்துக்கள் நடனமாடுவது போலவும் காட்சி அளித்தன. இன்று நேற்று ஏற்பட்ட பழக்கமா?

கையில் புத்தகம் முளைத்த நாள் முதலாய் எனக்குப் படிப்பு என்றால், படுத்தபடியே படிக்கிறது தான் படிப்பு. பள்ளிக்கூடத்துப் படிப்புகளில் மனம் ஊன்றாமல்போனதற்குக் காரணமே அங்கே உட்கார வைத்துப் பாடம் சொல்லியது தான். என்னைப் போன்றவர்களோ நிற்கும்படிதான் நேரிடுகிறது. பள்ளிக்கூடத்துப் பெஞ்சியில் உட்கார்ந்ததைவிட நின்ற ஆண்டுகள் தான் அதிகம். இப்படி நின்றும் உட்கார்ந்தும் படிக்கிற படிப்பு மூளையில் எப்படி ஏறும்?

படுக்கையில் கைக்கு இதமாகத் தலையணைகளைப் போட்டு மனம் போனபடி படிப்பேன். படிப்பு என்றால் தமிழ் மகளின் சிரிப்பொலி, கோபம், தாபம் அத்தனையும் என்னோடு விளையாடும்.

ஷேக்ஸ்பியர் சோக நாடகம் நடிப்பார்; கம்பன் கவியமுதம் தருவார்; பாரதி தேச பக்தி கொடுப்பார். எல்லாம் எனது படுக்கையோடு சரி. எழுந்திருந்து அவற்றைச் சுவைப்பது என்றால் இயலாத காரியம்.

ஆனால் இவர்கள் எல்லாம மயிலிறகு போல மென்மையும் இனிமையும் கலந்த பிறவிகளாய் இருக்கவேண்டும். செங்கல் போன்ற முரட்டுப் புத்தகங்கள், அகராதிகள், நிகண்டுகள் என் விரிப்பருகே தலை வைத்தும் நிற்கக்கூடாது. எடுப்பதற்கும, பிரித்துப் படிப்பதற்கு சொகுசாக இருக்க வேண்டும். என்ன தான் ரசங்கள் நிறைந்து, புத்தகம் கனமாகமட்டும் இருந்து விட்டால், அதன் சுவை என்னளவில் காட்டில் காய்ந்த




நிலவே. சில புத்தகங்களை மீண்டும் மீண்டும் படிக்கத் தோன்றும். அலுப்பு ஏற்படாது, திருக்குறள் அப்படி. குறவஞ்சியும் அப்படியே. எங்காவது சூரியோதயமும் சூரிய அஸ்தமனமும் அலுப்பாக இருக்கிறதா? பழமை நிறைந்த காவியங்களில் புதிய புதிய சுவை தோன்றிக் கொண்டே இருக்கும்.

மீனைத் தண்ணீரை விட்டு எடுத்துப் போட்டால் எப்படித் துடிப்பு நிற்குமோ, அப்படியே படுக்கையை விட்டு எழுந்து விட்ட எனது ரசிக உள்ளம் துடிப்பைவிட்டு விடும். மனம் ஊன்றாது. நிலைகொள்ளாது. பாரதிதாசன் கவிகள் சஞ்சீவிபர்வதத்தின் சாரல் கூட, குடும்ப விளக்கும் கூட, படுக்கையை விட்டு, எழுந்த பிறகு அப்படி அப்படித்தான்!

புத்தகப் படிப்பை நம்மவர்கள், 'ஏட்டுச் சுரைக்காய் கவைக்கு உதவாது என்றோ கறிக்கு உதவாது' என்றோ சொல்லி விட்டார்கள். புத்தகத்தின் அருமையை அவர்கள் அறியவில்லை. புத்தகத்தைப் படிக்கும் பழக்கமற்றவர்கள் தன்னொத்த, தன்னொடு பழகிய நண்பர்களோடு பேசி வாழ்நாளைக்கழிக்கிறார்கள். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதைக் கண்ணாடியில் காண்பது போலக் காண முடியும். ஆனால் புத்தகம் படிப்பதன் மூலம் தொலைநோக்கிக் கண்ணாடி போலப் பல்லாயிரக் கணக்கான மைல்களை இமைப் பொழுதில் கடந்து காலத்தையும் தூரத்தையும் வென்று விடுகிறோம். புத்தகம் இந்த இரண்டு எல்லைக்கும் அப்பாற்பட்ட மாயக் குளிகை.

அருமையான புத்தகத்தைக் கையில் நான் எடுத்துவிட்டால் உலகத்திலே அருமை பெருமை வாய்ந்த சொற்பொழிவாளரோடு, அளவளாவும் உணர்ச்சி பெறுகிறேன். எனக்குத் தெரியாத, தெரிய முடியாத விஷயங்களை, மனத் தத்துவங்களை அவர் பேசுகிறார். வள்ளுவரையும் இளங்கோவையும் படிக்கும்போது, அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை, அக்கால மரபு, அவர்கள் பேச்சொலி என மனத்திலே மணியோசை போன்று முழங்குகிறது. இந்த வாரத்து ரேஷன், கடன்காரர்கள் பாக்கித் தொல்லை, பால்காரன் தொந்தரவு எல்லாம் மறந்து ஏதோ இரண்டு மணி நேரம் சொப்பன வாழ்க்கையில் புகுந்து விடுகிறேன்.

எல்லா நூல்களையும் ஒரே ரீதியில் நான் அனுபவிக்க முடியாது. மன இன்பத்திற்காகப் படிப்பதைவிட, ...வத் என்ற எண்ணத்...த்தேன். ...கும் சந்தர்ப்பங் இன்பம — என்னால் அ... இல்லையென்று ...லலாம். நாம் ...மல் ஏழையின் ..., துக்கத்தை, வறு... அனுபவிக்கிறோம்; ...ரன் ஆகாமல் அவன் ...கங்களை உணர்கிறோம். ...ம ஆயிரமாக முதல் ...ாமல் முதலாளியின் ...ங்களைத் துய்க்கிறோம். ...தடியும், குண்டாந்தடித்





படிக்கும்படி தூண்டு வார்கள். இரண்டொருவர் கையோடு கொண்டுவந்து நான் படிக்கப் படிக்க, அவர் கள் ரசிப்பார்கள்; எனக்குத் திக்குளிப்பதைப் போல இருக் கும்!

புத்தகத்தைப் படுத்தபடி படிக்கக்கூடாதெனக் கண் வைத்தியர் கண் நோக்கத்திற் திற்காகச் சொல்லுகிறார். சிறு பிள்ளையில் என் மனப் போக் குப்படி படிக்கும்படிவிடவில்லை. எனக்கு, மாலை ஆறு மணி யடித்து, குத்து விளக்கு முன் போனாலே சாமி ஆட்டம் கண்டு விடும். கழுத்தில் தலை
நிற்காது. குழைந்து
காரணந்து ஆடும். தலை பாதத்
வைத்துப் விழும். விளக்கைக்
தான். என்னை எனக்கு நித்திரை
களோ நிற்கு டுவதோடு ஆடி
நேரிடுகிறது. பள் விளக்கில்
பெஞ்சியில் உட்கார்ன். அதி
நின்ற ஆண்டுக புத்தகத்
அதிகம். இப்படி நில் வழியும்.
கார்ந்தும் படிக்கிற ழியாமல்
மூலையில் எப்படி எறும்பில் ஒரு

படுக்கையில் கைக்குலுள்ள
மாகத் தலையணைகளைப் டேர்கள்.
மனம் போனபடி படிப்வந்து
படிப்பு என்றால் தமிழ் மக

விழுந்தால் லகான் மாதிரி தலைக் கயிறு சுண்டிவிடும்; பின் னால் சுவரில் போய் விழுந்தால் ஆணி இடிக்கும். ஆனால் பழக் கப்பட்ட தலையோ பக்வோட் டில் இடசாரி வலசாரியாக வீழ்ந்து, இந்த நாள் பஸ்ஸில் பிரயாணிகள் கைப்பிடியில் தொங்குகிற மா-திரி தலை தொங்கத் தொங்க நான் படிக் கும் காட்சி, அடடா........... அந்த அற்புதம் என்னே? என்னே?

அன்று புத்தகங்கள் என் தூக்கத்தின் தூண்டு கோல்க ளாய் இருந்ததால் தானோ என் னவோ, இன்று எனது விழிப் பிற்குத் தூண்டுகோலாய் இருக்கின்றன. காலதேவனின் சுழற்சிகள், பருவ காலங்களின் மாறுதல் எதையும் கவனிக்கா மல், புத்தகத்துள் ஆழ்ந்து விடுவேன். படிப்பதைக் கரும சிரத்தையாக, நிமிர்ந்து இத் தனை டிகிரி வாட்டில், படிக்க வேண்டுமென்று போதனை செய்வார்கள். இதில் ஒவ்வொ ருத்தருக்கு ஒவ்வொன்று எளிது. ரயில் ஓடினால்தான் சிலர் படிக்க ஆரம்பம் செய் வார்கள். எனது நண்பருக்கு





அருகாகத் தளிர் வெற்றிலையும், வாசனைப் பாக்கும், வெண்ணெய்ச் சுண்ணும்புடன் புரிமள புகையிலையும் இருந்துவிட்டால் ஆயிரம் ஆயிரம் பக்கங்கள் படிப்பார். டீயும், காபியும் இருந்தால் படிக்கக்கூடிய புலிகள் உண்டு. உலாவிக் கொண்டே படிப்பவர்களும், நதி தீரத்துப் பட்டு மணலிலே, சிட்டித் துண்டு விரித்துக் குப்புறப் படுத்தபடியே படிப்பவர்களும் உண்டு.

இப்படிப் புத்தகம் படிப்பவர்கள - புத்தகங்களைப் போலப் பலப்பல ரகங்கள். படிப்புக்கு நேரமோ காலமோ தேவையில்லை. அந்த எண்ணம் வந்தால் போதும் புத்தகமும் கையுமாக உட்கார்ந்து விடலாம். எனக்குப் புத்தகத்தைப் படிப்பது இளைப்பாறுகிறதைப் போல, ஓய்வு எடுக்கும் பொழுதாகப் படிப்பதே எனது பாடம். என் பாட்டனர் "படிக்கிறவன் எங்கும் படிக்கலாம். பட்டணங்களில் போய்க் கலாசாலையில்தான் படிக்க வேண்டுமென்பதில்லை. பட்டிக்காட்டில் இருந்தபடியே எதையும் படிக்கலாம். படிக்கும் நோக்கம இருக்க வேண்டும். பள்ளிக்கூடம் போயும், படிப்பு வாசனையற்ற ஆத்மாக்களாக எத்தனையோ பேர் ஆண்டு தோறும் வெளியே வருகிறார்கள்" என்று வருத்தப்படுவார்.



ஒரு வகையில் அவர் சொல்வது உண்மையே. பள்ளிக்கூடத்தில நாம் படித்த புத்தகங்கள் இலக்கியம் முதல நாட்டியம் வரை, ரொம்ப ரொம்பக் குறைவு. பிறகு நானாகப் படிக்க ஆரம்பித்த பிறகுதான் விதவிதமாக, விந்தை விந்தையாகப் படிக்க ஆரம்பித்தேன். இப்பேர்ப்பட்ட ஒரு அதிசய உலகத்தை என் பள்ளிக்கூடத்தில் நமக்குக் கண் திறந்து காட்டாமல் திரையிட்டு வைத்தார்கள் என்றும் நினைத்தேன்.

படிப்பதிலுள்ள இன்பம் — வேறெதிலுமே இல்லையென்று கூடச் சொல்லலாம். நாம் ஏழை ஆகாமல் ஏழையின் கண்ணீரை, துக்கத்தை, வறுமையை அனுபவிக்கிறோம்; பணக்காரன் ஆகாமல் அவன் சுக துக்கங்களை உணர்கிறோம். ஆயிரம் ஆயிரமாக, முதல் போடாமல் முதலாளியின் போகங்களைத் துய்க்கிறோம். அடிதடியும், குண்டாந்தடித்

தாக்குதலுமின்றி, காந்தீயத்தை அனுபவிக்கிறோம். பிறருடைய இன்பங்களையும் இன்னல்களையும் புத்தகத்தில் காண முடியும். படித்துத்தான் என் போன்றவர்களால் இந்த ரகசியங்களை அறிய முடியும்.

என்னைவிடச் சில மேதைகள் இருக்கிறார்கள். அவர்கள் படிக்கவேண்டியதில்லை. வாழ்க்கையை நன்கு புரிந்து கொண்டவர்கள். புத்தகத்திற்குப் பதிலாக வாழ்க்கையை நேர்முகமாய்ப் படிக்கிறார்கள். அவர்களுக்குப் பார்க்கும் பொருளெல்லாம் புத்தகங்களே; நீரோடையும், நிலாவும், நீல வானும், நீண்ட புரிகுழலும், நீலோற்பலமும் எல்லாம் புத்தகங்களே. உலகம் அறிந்த இம் மனிதர்களுக்குப் பிரயாணத்தை விட ரசமான புத்தகம் ஒன்றுமே கிடையாது. ரயில் வண்டியும், சோடா விற்பவனும், அழுங் குழந்தையும், டிக்கட்டில்லாப் பிரயாணியும், விசில் ஊதும் கார்டும் அவர்கள் கண்ணிலே திறந்த புத்தகங்கள்.

அப்படிப்பட்ட திறமை எனக்குக் கிடையாது. அதற்காக வருத்தப்படவும் இல்லை. நம் ஆயுளில் நேர் பாதியைப் படுக்கையில் கழிக்கிறோம் என்கிறார்கள். ஆனால் அதில் பாதியில் பாதியை நான் படித்துக்கொண்டு கழிப்பதாகப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். பிறகு இப்படிச் சொல்ல முடியுமோ?

..பொது மேடை..

இப்பகுதி வாசகர்களுக்கென்றே மீண்டும் தொடங்கப்படுகிறது. 'பொன்னி'யைப்பற்றி மட்டுமல்ல, உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் எதைப்பற்றியும் அன்பர்கள் தங்கள் கருத்துரைகளை எழுதியனுப்பலாம். ஆனால் ஒன்று, ஒரு 'கார்டு'க்குள் அக்கருத்துரை அடங்கியிருக்க வேண்டும்.

கடலூர்ப் புதுநகர்
30-9-49

☆ வெற்றி நமதே!

திராவிட நாட்டைக்கவ்வியிருந்த காரிருள் நீங்கி இன்று உதய சூரியனின் ஒளி பரவி விட்டது. திராவிடத்தின் இளஞ்சிங்கங்கள் கழகக் கதிரோனின் ஒளிக்கதிர்கள் ஆகிவிட்டனர். திராவிடர் கழகம் அஸ்தமித்துவிட்டது என எக்களிப்புக் கொண்ட பத்தாம் பசலிகளின் எண்ணத்தில் இடி விழுந்தது. திராவிடர் கழகச் செடியில் புதுமலர் பூத்துவிட்டது; திராவிட முன்னேற்றக் கழகம் மலர்ந்து விட்டது; புரட்சி மணம்பரப்பும் மல்லிகை மட்டுமல்ல, என்றுமே வாடாத வாடாமல்லிகையும் கூட நமதுமுன்னேற்றக் கழகம்! எதிர்பாராத நிகழ்ச்சியின் காரணமாக நமது கழகப்பணி தேக்க நிலை அடைந்திருந்தது. இதோ புதுக்கால்வாய் வெட்டப்பட்டு விட்டது; இனி நமது ஊக்கம் மடை திறந்துவிட்ட வெள்ளம்தான்! திராவிடமே நமது விளைநிலம். நாட்டினரின் நல்வாழ்விற்கான நமது கொள்கைகளே நல்வித்துக்கள். உற்சாகம் மிகுந்த உழைப்பாளிகள் நம்மிடையே ஆயிரமாயிரம்! ஆகவே சேர்ந்து பணி செய்யத் தொடங்குவோம். பலன் காண்பது நிச்சயம். வெற்றி நமதே!

தங்கச்சிலை

○●○

சென்னை
1-10-49

கடிதம் எழுதும் கலை

நம் செந்தமிழ் நாட்டில் கடிதம் எழுதும் கலை இன்னும் நன்கு வளர்க்கப்படவில்லை என்று நான் கருதுகின்றேன். மேல் நாடுகளில் இக்கலை சிறந்த முறையில் போற்றப்படுகின்றது. தொலைவின் காரணமாக, நேரில் கண்டு பேசமுடியாத நிலையில் இருப்பவர்கள் செய்திகளைக் கடிதத்தின் வழியாகத் தெரிவித்துக் கொள்கின்றார்கள். இப்படி அறிவிக்கும்போது பல சொற்களில் இயங்கவேண்டிய பேச்சு சில சொற்களில் சுருக்கப்படவேண்டியது முதன்மையாகும். பெரிய கதை போலவும் நீண்ட கட்டுரை போலவும் அமைகின்ற கடிதங்கள் சிறப்புடையவை ஆகமாட்டா. கடிதம் ஒருவர் உள்ளத்தை இன்னொருவருக்குப் பளிங்குபோல் காட்டவேண்டும். எனவே அதில் கடினமான சொற்களும், சொற்றொடர்களும் விலக்கப்படவேண்டும். சுற்றி வளைத்துச் செய்தியைக் கூறுவதும் பெரும் பிழையாகும். நேரடியான முறையில், இனிய, எளிய நடையில் படிப்பவரின் உள்ளத்தை உடனே பற்றுகின்ற வகையில் கடிதம் அமைவது மிகுந்த நன்மை பயக்கும். இக்கலை செம்மையுற்றுச் சீர்பெறவேண்டும் என்ற ஆசையின் காரணமாகவே இக்கடிதம் எழுதலானேன்!

கோ. திருஞானம்

○●○

குளக்குடி
27-9-49

வைதீகத்தின் வைரி

பொன்னி நதி குடகிலே உற்பத்தியாகி தமிழ் நாட்டின் வளப்பத்தை மேன்மைப் படுத்துவதைப்போல, பொன்னி புதுக்கோட்டையில் உரு

வானாலும் தமிழ்நாட்டின் மூலே முடுக்குகளிலுள்ள வைதிக மனப் பான்குள்ள பெண்களுக்குப் புடமிட்டுப் புதுமெருகு கொடுத்துச் சீர்திருத்தக்கருத்துக்களை ஊட்டுகிறது. உங்களுடைய பொன்னி பெண்களின் கருத்தில் புட்சித் தீயூட்டுகிறது. பகுத்தறிவுக்கு வழிகாட்டிக் கொண்டு மூட நம்பிக்கைகளை முறித்தெறியும் புரட்சி வித்தாக இருக்கிறது உங்கள் பொன்னி. சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிகளென்ற எண்ணத்தைக் கட்டறுத்து உண்மை வீராங்கனைகளாக ஆக்குகிறது உங்கள் பொன்னி. பணத்திற்குப் பல்லிளிக்கும் நாட்டில் பிறந்த நங்கையர்கள் பொன்னியைப் படித்ததின் பயனாக லட்சம் வைத்திருக்கும் பிரபுவை மணக்க உடன்படாது, தனக்கொத்த தலைவனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் துடுக்குப் பெண்களை உங்கள் பொன்னி உருவாக்குகின்றது.

ச. பொருட்செல்வி

○●○

உடுமலை
2-10-49

சேற்றில் செந்தாமரை

"பொன்னி" பகுத்தறிவு நல்கும் ஓர் களஞ்சியம். களஞ்சியத்திலே கொட்டி வைக்கப்பட்ட நெல், எப்படி மக்களின் பசிக்குப் பயன்படுகிறதோ அதேபோல் "பொன்னி"க் களஞ்சியத்திலுள்ள "பகுத்தறிவு" நெல், மக்களை "மடமை"ப் பசியிலிருந்து மீட்கிறது. "பொன்னி" சேற்றிலே தோன்றிய "செந்தாமரை". மக்களை மாக்களாக்கும் ஆபாச இதிகாச புராணங்களும் குருட்டு நம்பிக்கையும்தான் சேறு. தாமரையின் ஒவ்வொரு இதழ்களும் ஒவ்வொரு எழுத்தாளர்கள். அவ்விதழ்களின் செம்மை நிறம், அவ்வெழுத்தாளர்கள் நல்கும் நல்லறிவு. இச்செவ்விதழ்கள் சேர்ந்ததுதான் பொன்னி மலர். சகிக்கமுடியாத நாற்றமுடைய சேற்றிற்கிடையில் இம்மலர் தோன்றினாலும், இது மற்ற மலர்களைவிட அதிகமாக மதிக்கப்படுகிறது. அது போலத்தான் உங்கள் "பொன்னி"யும்."

நடராசன்

○●○

உட்லூர்
27 9-49



குழந்தைப்பத்திரிகை ஆசிரியர் கடைவீதி சென்று திரும்புகிறார்.

முதல் வேலை

உலக அரங்கில் அமெரிக்கா அணுச்சக்தியை அளவுகோலாகக் கொண்டு அன்னிய நாடுகளை அடக்கி, அகிலமெங்கும் தன்புகழ் பரப்பி அரசோச்ச அவாக்கொண்டு, சமதர்மத்தைச்சாகடிக்க பொதுவுடைமையைப் பொசுக்க அகிலத்து அனைத்து நாடுகள் அவையிலே அரியணை ஏறி, டாலர் வலை வீசிவரும் நேரத்தில் சிரழிந்த சீனு பொதுவுடமை புரியாக மாறிவரும் நேரத்தில் தமிழர்களின் ஒப்புதலின்றி ஓராண்டு காலமாக அம்பேத்கார்களையும், அங்கே அலங்காரப் பதுமைகளாக அமர்ந்திருக்கும் தமிழர்களையும் ஆடும் பதுமைகளாக்கி, பண்டிதரின் புன்சிரிப்பையும் பிரசாதின் பிரசங்கத்தையும், சட்டமாக்கிக் கொண்டு, இலக்கிய வளமற்ற இந்தியை இன்பத் தமிழைத் தாய்மொழியாகக்

கொண்டு, தரணியாண்ட, தமிழர்களுக்கும் 'பொதுமொழி' என்னும் பொன்மாலே சூட்டி, அரசியல் அரங்கிலே அரியணையிலே அமர்த்தி விட்டனர். அதுமட்டுமல்ல, கனக விசயர் சிரத்திலே கல்லேற்றிய காவலனும் இமயத்திலே இலச்சினை இட்ட இமயவரம்பனும், ஆரியப் படை கடந்த ஆற்றலரசன் நெடுஞ்செழியனும், காத்தாண்ட கன்னித் தமிழகத்தையும் 'பாரத்' என்றே அழைப்பார்களாம். அந்த அடாது புரியும் அவசரக்காரர்கள் - கங்கை கொண்டோன் வீரத்தை உணரா வீணர்கள்! ஆந்திரரும், தமிழரும் திராவிட இனத்தினர்-உடன் பிறந்தவர்கள் - கலையில் வாழ்க்கையில் இவர்கள் இருவரையும் இருதுருவங்களாக்க இருக்கமுடியாத - 'தனி மாகாணம்' எனும் மயக்க மருந்தூட்டி, ஒரு இரைக்காக இரண்டு சிங்கங்கள் சீறிப்பாயும் நிலையை உண்டாக்கிவிட்டுச் சிதறிய சிறு துண்டைக் கவ்விக் கொண்டோடும் சிறு நரிபோல, உடன் பிறந்தோர் உறுமிக்கொள்ளும் நிலையை உண்டாக்கி விட்டு-திராவிடத் தலைநகரை சென்னையைத் தட்டிக் கொண்டு போகத் தருக்கர் கூட்டம் முனைந்து நிற்கிறது. தன்மானத் தமிழன் தூங்குகிறான்-மாடலனுக்கு விருந்தளித்த வில்லவன் கோதையாகவே இருக்கிறான் என்ற இழி நினைப்போடு இங்கே இருக்கும் சாணக்கியக் கூட்டத்தையும் விபீடணர்களையும் முதுகிலே தட்டிக்கொடுத்து முன்னேடும் பிள்ளைகளாக்கி விட்டோம் - அவர்களுக்குத் தாசர்புத்தி தலைக்கேறி விட்டதென்று மனம் மகிழ்கிறது. வஞ்சக வடவரின் வகையற்ற-வம்பு வளர்க்கும் மூன்று திட்டங்களையும் உடைத்தெறிய வேண்டியது-'திராவிட முன்னேற்றக் கழகத்தின்' முதல் வேலையாக - போர்க்களப் பணியாகவே இருக்கவேண்டும் வடவரின் வஞ்சகத்தை வீழ்த்தி வாகை சூட வாருங்கள்.

க. கூடலரசன்

○●○

சேலம்
29 9-49

இன்பபுரிப் பயணம்

'பொன்னி'யின் புன்முறுவலிலே ஈடுபட்டுக் கடைக்கண் வீச்சுக்கு ஏங்கித் தவிக்கும் காளைகளிலே நானும் ஒருவன். "பொன்னி"யை நான் தினந்தோறும் சுவைக்க எண்ணுகிறேன்; ஆனால் அவள் சரியாகப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறைதான் காட்சி அளிக்கிறாள். புதுப்புது உடை உடுத்து, புதுக்கோலம் பூண்டு, புதுக்கருத்துக்களைத் தாங்கி, புதுக்கோட்டையிலிருந்து புது நடை நடந்து புன்முறுவல் பூக்கும் போது என்காதல் உள்ளம் கட்டுப்பாடற்ற காட்டாறாகிறது. 'பொன்னி'யைப் புதுப் புதுக்கோலத்தில் காணும் போதே ஒரு பூரிப்பு! தொட்டதும் ஒரு மகிழ்ச்சி! கருத்தோவியங்களைக் காணும்போதுஒருகளிப்பு!சுவைக்க ஆரம்பித்துவிட்டால் — சொல்லவா வேண்டும்! இன்பபுரிப் பயணந்தான்! வாழ்க 'பொன்னி'. வளர்க அவள் தரும் இன்பம்!

R. கலியபெருமாள்

○●○

திருச்சி
29-9-49

அடுத்த பாதி

நூறு ரூபாய் நோட்டைத் தபாலில் அனுப்பும் பொழுது ஒரு பாதியை முன்பும் மறுபாதியைப் பிறகும் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்புகிறார்களல்லவா? முதற்பாதி கிடைத்தவுடன் அடுத்த பாதியை எவ்வளவு ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறார்களோ அவ்வளவு ஆவலாயிருக்கிறது தோழர்கள் டி. கே. சீனிவாசன், பாண்டுரங்கன் முதலியோரது சிறுகதைகளை இரண்டாக்கி நீங்கள் எங்களுக்குக் கொடுக்கும்பொழுது. அவர்களது எழுத்துக்கள் சிறுகதை வரிசையில் முதலில் நிற்கின்றன. பொன்னி வந்தவுடன் முதலில் வழிப்போக்கன் உல்லாசங்கட்குத் தரும் சரக்கைப் பார்த்த பிறகே மேலேசெல்லத் தூண்டுகிறது. அறி

ஞர் அப்பாத்துரை பன்மொழிப்புலவர் என்பதை அவரது தொடர்ந்த கட்டுரைகள் தெரிவிக்கின்றன. எல்லோரையும் சுலபமாகவும் புரிய வைக்கிருர் அவர். ஆசிரியர்கருத்துக்களும் தெளிவாய்ப் பரிமாறப்படுகிறது.

R. நாகசுந்தரம்

○●○

பம்பாய்
28-9-49

இயக்கப் பணி

கழக இலட்சியங்களைக் காப்பாற்றுவதும், இயக்கப் பணியைத் தொடர்ந்து நடத்துவதும்தான் இன்றைய குழப்பங்களைத் தீர்க்கும் முறை என்பதைத் தெளிவாக்கி அறிஞர் அண்ணு அவர்கள் கொடுத்திருக்கும் விளக்கம் இந்நெருக்கடியான சமயத்தில் எண்ணற்ற திராவிட மக்களுக்குப் புதியதொரு நம்பிக்கையை அளிக்குமென்பது திண்ணம். கட்சிப் பிளவு பற்றி வருந்தாமலிருக்கவே முடியாது. எனினும் "உற்ற நோய் நீக்கி யுரு அமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்" — என்பதை உணர்ந்து அண்ணுவின் தலைமையில் "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைத்தது குறித்து ஒருவாறு ஆறுதலடைகின்றேன். வாழ்க திராவிடம். வாழ்க அண்ணு.

தி. அ. கணபதி.

○●○

ஆனைமலை
26-9-49

என்னைக் கவர்ந்தவை

'பொன்னி' இதழைப் பார்க்கப் பார்க்கப் போற்றிப் பாசுரம் இயற்றலாமா என்று கூட எண்ணம் எழுகிறது. அதன் ஒவ்வொரு பக்கமும் பொன்னான சமாசாரங்களை, நீதிகளைத் தாங்கி வருவதால் எல்லோர் மனதையும் வெகுவாகக் கவர்ந்து விடுகிறது. 'பாரதிதாசன் பரம்பரை' 'சிலப்பதிகாரக் காட்சிகள்' இரண்டும் 'பொன்னி'யின் எழில் மிகுந்த அங்கங்கள். சிறந்த எழுத்தாளர்களைக் கொண்ட 'பொன்னி' சிறப்புற்று நீடுழிகாலம் வாழ்க! 'பொன்னி'யின் எழில் மிக்க வண்ண முகப்பு, ஓவியர் கண்ணன் புகழைப் பார் முழுதும் பறைசாற்றுகிறது. ஓவியர் கண்ணனை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

ஆ. ரா. வெற்றிவீரன்.

○●○

திருப்பாப்புலியூர்
26-9-49

வியப்பில்லை

சாதி சமய உயர்வு தாழ்வு, பொய்யான-மாயாவாதம் நிரம்பிய "கடவுட் தத்துவங்கள்" இவைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் வெறும் இலக்கியச்சுவை நிரம்பிய தீந்தமிழ்ப் பெருங் 'காவியங்கள்.' சரித்திர அடிப்படையில் தமிழர் பண்பாடு பற்றிய ஆராய்ச்சிகள், தாரதம்மியம் அறிந்து செய்யப்படும் அரசியல் விமர்சனங்கள் இலேசான ஹாஸ்யத்துடன் சமூகக் 'காளான்'களைக் கிண்டல் செய்து களைந்தெறிய முயற்சிக்கும் தனிப்போக்கு, மற்றும் தற்காலப் பத்திரிகை தாமத்துக்குப் பிரத்தியேகத் தேவையான 'தொடர் கதை' அம்சங்கள்-எல்லாவற்றுக்கும் மேலாக மற்றெந்தத் தமிழ்ப் பத்திரிகையிலும் காணமுடியாத கருத்து நிரம்பி உணர்ச்சி யூட்டும் உயர் கவிதைகள்—வேறென்ன வேண்டும் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள? வனப்புமிக்க வண்ணம் திகழும் மேலட்டையும் வளம் நிரம்பும் வளரும் இலக்கியமும் வாசித்து இன்புறும் வாய்ப்புக் கொண்ட தமிழ் மகன் பொன்னிக்குத் தக்க வரவேற்பு அளிப்பதில் வியப்பில்லை.

வெ. சீ. கிருஷ்ணசாமி

☆ பரிசுபெற்ற கடிதம்:-

சொர்ணமூர்த்தி பி: ஏ:
S/o A. சுப்பிரமணிய பிள்ளை,
2, அங்காளம்மன் கோயில் தெரு,
கடலூர்ப் புதுநகர்.

ரூ. 5/- மணியார்டர் செய்யப்பட்டது.



இருபத்தாறும் அத்தியாயம்
உடைந்த உள்ளம்!

ஏந்தக் கோணத்திலிருந்து யோசித்துப் பார்த்தாலும் இந்தியா சுதந்திரம் அடையும் வரை நான் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பதுதான் நல்லதென்று எனக்குத் தோன்றிற்று. இந்தியா என்னும் ஒரு பெரிய குடும்பம் இருக்கும்போது இன்னொரு சிறிய குடும்பத்தை நான் ஏன் விரும்பவேண்டும்? இரண்டிலும் இன்பமும் உண்டு துன்பமும் உண்டு. அவற்றில் ஏதாவது ஒன்றைக் கட்டிக்கொண்டு அழுதால் போதாதா? சிறிய குடும்பத்தைக் கட்டிக்கொண்டு அழுவதற்கு இந்தத் தேசத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். பெரிய குடும்பத்தைக் கட்டிக்கொண்டு அழுவதற்குத் தானே ஆள் வேண்டியிருக்கிறது! இதை மனதில் வைத்துக்கொண்டுதானே விவேகானந்தர் கல்யாணம் செய்து கொள்பவர்களையெல்லாம் முட்டாள்கள் என்று சொன்னார்? அந்த முட்டாள்களில் நாமும் ஒருவனாக வேண்டுமா?

அந்தக் காலத்தில் இன்னொரு அதிசயமும் அங்கங்கே நிகழ்ந்துகொண்டிருந்தது. அதாவது, கல்யாணமான சிலர் இந்தியா சுதந்திரம் அடையும் வரை பிரம்மசாரிகளாக இருப்போம் என்று விரதம் பூண்டனர். இந்த விநோதமான விரதத்துக்கு ஆரம்பத்தில் காந்தி மகானின் ஆதரவும் ஓரளவு இருந்தது. ஆனால் விரதம் பூண்டவர்களின் மனைவிமார்கள் அந்த விரதத்துக்கு ஆதரவு காட்டவில்லை. அதற்குக் காரணம் பெண்மைக்கு இயல்பான குழந்தை இன்பத்தை அவர்கள் விரும்பியது தான். இந்தக் குற்றமற்ற

விருப்பத்தை அறிந்த பிறகும் அவர்களுடைய கணவன்மார்கள் தங்களுடைய விரதத்தை கைவிடவில்லை. ஆகவே வேறு வழியின்றி அந்த விநோத பிரம சாரிகளுடைய மனைவிமார்களில் சிலர் மகாத்மாவின்மீது படையெடுத்தனர். தங்களுடைய குறையை அவர்கள் மகாத்மாவிடம் தெரிவித்தனர். காந்தி மகாத்மாவின் பாடு தர்ம சங்கடமாகப் போய்விட்டது. அவர் உடனே அந்த அதிசயப் பிரகிருதிகளை அழைத்து விரதத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் அதற்கு இணங்கினர். கேலிக்கு இடமான இந்த விரதபங்கத்துக்கு ஆளாவதைக் காட்டிலும் விரதம் எடுத்துக்கொள்ளாமலிருப்பதே நல்லதல்லவா? அதை விட விவாகம் செய்துகொள்ளாமலிருப்பதுதான் எவ்வளவு நல்லது!

அதிலும் என்னைப்போன்றவர்களுக்கு இன்னொரு சங்கடமும் இருந்தது. குடும்பத்துக்குத் தலைவனாயிருக்கும் ஒருவன் தேசத்துக்குத் தொண்டனாயிருக்க வேண்டுமானால் அவனுக்குப் பணத்தைப் பற்றிய கவலையே இருக்கக் கூடாது. அந்தக் கவலைதான் எனக்கு அல்லும் பகலும் அனவரதமும் இருந்துகொண்டிருக்கிறதே! இந்த லட்சணத்தில் நான் சாந்தினியைக் கல்யாணம் செய்துகொண்டு என்னத்தைச் செய்ய?

ஆனால் எனக்காக ஒரு பெண் எவ்வளவு நாட்கள் காத்துக்கொண்டிருக்க முடியும்? அவள் காத்துக்கொண்டிருந்தாலும் அந்தப் பிரசித்தி பெற்ற 'நாலுபேர்' இருக்கிறார்களே, அவர்கள் சும்மா இருப்பார்களா?- இதுவும் ஒரு பெரிய பிரச்சனையாகத் தோன்றி என்னை வதைத்தது. எதற்கும் முதலில் வரும்படிக்கு ஏதாவது வழி தேடிக்கொண்டால் தேவலை என்று தோன்றவே, அதைப்பற்றி யோசித்தேன்.

சில தேச பக்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒருநாள் இருபத்துநான்கு மணி நேரமும் தேசத்துக்காகவே உழைக்கிறார்கள். அதிலும் உள்ளூரில் இருந்துகொண்டே உழைக்கிறார்களா?—இல்லை. அடிக்கடி வெளியூர் செல்கிறார்கள். எப்படி? கால் நடையாகவா? — இல்லவேயில்லை. ரயிலில் முதல் வகுப்பில் ஏறிக்கொண்டு ஓடுகிறார்கள்; ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு பறக்கிறார்கள்; குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் காரில் ஏறிக்கொண்டு அங்குமிங்கும் அலைகிறார்கள். இத்தனைக்கும் அவர்களுடைய உடம்பு கொஞ்சமாவது இளைக்கிறதா?- கிடையவே கிடையாது. அதற்குப் பதில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பருத்துக்கொண்டு வருகிறது. அவர்களுடைய குடும்பம் எந்தவிதமான கவலையுமின்றித் தழைத்துக்கொண்டு வருகிறது; அதற்கு வேண்டிய செல்வம் பெருகிக்கொண்டு வருகிறது. இது எப்படி? வரும்படியில்லாமல் ஒருவன் இப்படியும் வாழமுடியுமா?- இதுதான் நமக்குப் புரியாத புதிராயிருக்கிறது! மாலைபோடுவதையும் கைதட்டுவதையும் தவிர நமக்கு இந்த அரசியல்

உலகத்தில் வேறு என்ன தெரிந்து தொலைகிறது?

ஆகவே, வரும்படியுள்ள தேசபக்தனாக வாழ நமக்கு வழி தெரியவில்லை என்று தான் நான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

காங்கிரஸின் பேரால் தேர்தலில் நிற்கலாம், அதன் பயனாக ஏதாவது ஓர் அங்கத்தினர் பதவியைக் கைப்பற்றலாம். அதைக் கொண்டு காலந் தள்ளலாம் என்று பார்த்தாலும் அங்கே நம்மைப் போன்றவர்களை நெருங்கவே விடமாட்டோம் என்கிறார்கள்!

இப்படிச் சொல்லும்போது இன்னொரு விஷயத்தையும் நாம் இங்கே கவனிக்கவேண்டியிருக்கிறது. எல்லோரும் என்னைப்போலவே காங்கிரஸின் பேரால் பதவியைக் கைப்பற்றுவது என்று தீர்மானித்தால் தேசம் எந்தத் தொண்டர்களின் உழைப்பைக் கொண்டு உருப்படுவது? — ஆகவே, இதுவும் சரியில்லை.

சர்க்கார் உத்தியோகமும் எனக்குப் பிடிக்கவில்லை. சுதந்தர சர்க்காரில் வேண்டுமானால் உத்தியோகம் பார்க்கலாம். அடிமை சர்க்காரில் உத்தியோகம் பார்க்கலாமா?— அப்படிப் பார்ப்பதாயிருந்தால் நானும் பரந்தாமனைப்போல் வக்கிலாகவே கொஞ்ச காலம் இருந்து போதுமான பணம் சேர்ந்த பிறகு அந்தத் தொழிலைவிட்டிருக்கலாமே!

தனிப்பட்டவர்களுடைய கம்பெனிகளில் வேலை பார்ப்பதற்கும் ஒரு தடை இருந்தது. காந்தியத்தின் அடிப்படையில் எந்தக் கம்பெனியாவது நடக்க முடியுமா? அப்படி நடந்தால் அதனுடைய முதலாளி மகாத்மாவைப்போல் அரை நிர்வாணப் பக்கிரியாகத்தானே ஆக வேண்டியிருக்கும்? அத்தகைய வாழ்வை யார் விரும்புவார்கள்? விரும்பாதவர்களிடம் நாம் எப்படி வேலை பார்ப்பது?

ஏதாவது வியாபாரத்தில் இறங்கலாமென்றாலோ, சத்தியத்துக்கும் அதற்கும் ரொம்ப ரொம்ப தூரம்!

இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்த பிறகு, வீட்டு வாத்தியாராக இருந்து காலந் தள்ளலாமென்று எனக்குத் தோன்றிற்று. அதற்குள் காங்கிரஸ் ஏதாவது போராட்டம் ஆரம்பித்தால் சர்க்கார் நம்மை விருந்தாளியாக வருந்தி ஏற்றுக்கொள்வார்களல்லவா?

இந்த யோசனை பரந்தாமனுக்கும் சாந்தினிக்கும் அவ்வளவாகப் பிடிக்கவில்லையென்றாலும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எந்தவிதமான வரும்படியும் இல்லாமல் பரந்தாமன் என்னை ஆதரிக்கத் தயாராயிருந்தார் என்றாலும் எனக்கு அது பிடிக்கவில்லை. அதே சமயத்தில் வயிற்றுக் கவலையைத் தீர்த்துக்கொள்வதற்காக அடிக்கடி நண்பர்களை நாடுவதும் எனக்கு என்னவோ போல் இருந்தது. சாந்தினியைப்போல் நாம் எதிர்பாராமலே உதவி செய்வதற்கு வேறு யாராவது முன் வருவார்களா, என்ன?

பாரிஸ்டர் பரந்தாமனை நண்பராகப் பெற்றிருந்த எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க நான்கு பெரிய மனிதர்களின் வீடுகள் கிடைப்பதில் ஒன்றும் சிரமம் ஏற்படவில்லை. வாத்தியார் தொழிலுக்கு நான் படித்

திருக்கவில்லை யென்றாலும், படித்தவருக்கும் எனக்கும் எந்த விதமான வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகவே, உற்சாகத்துடனேயே நான் அந்தத் தொழிலில் இறங்கினேன்; கவலையின்றிக் காலத்தைக் கழித்தேன்.

இந்தச் சமயத்தில்தான் என்னைப் போன்றவர்களுக்காக அடால்ப்ஹிட்லர் மனம் இரங்கினார். அந்த மாகானுபாவர் கருணைகூர்ந்து இரண்டாவது உலக மகாயுத்தத்தை ஆரம்பித்து வைத்தார். பிரிட்டிஷ்சர்க்கார் நம்மைப் பொருட்படுத்தவில்லை; இந்தியா நம்முடைய தேசம் என்பதையும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் இந்தியாவைத் தங்களுடைய தேசமாகவே கருதி, அதை யுத்தத்திலும் இழுத்து விட்டுவிட்டனர். இந்த அக்கிரமத்தைக்கண்டு காங்கிரஸ் மகா சபை வெகுண்டெழுந்தது. அதன் பயனாகக் காங்கிரஸின் பேரால் மந்திரிகளானவர்கள் தங்களுடைய பதவிகளை ராஜினாமா செய்தார்கள். உள்ளொன்றுவைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாத சுபாஷ்சந்திரபோஸ் மாயமாய் மறைந்தார்.

காந்தி மகாத்மாவின் தலைமையில் பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்து இந்தியா மீண்டும் போர்க் கோலம் பூண்டது. தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. வினோபாபாவே சர்க்காரின் முதல் விருந்தாளியானார். அவரைத் தொடர்ந்து பலர் சிறைக்குச் சென்றனர். பாரிஸ்டர் பரந்தாமனுக்கும் அந்தப் பாக்கியம் கிடைத்தது, என்னைப் போன்றவர்களுக்குத்தான் அந்தப் பாக்கியம் கிட்டவில்லை.

ஏன்?— நாங்கள் சத்தியாக்கிரகம் செய்யவில்லையா?- செய்யத்தான் செய்தோம். ஆனால் சர்க்கார் எங்களைக் கைது செய்யவில்லை. லாரியில் ஏற்றிக்கொண்டுபோய்ப் போக்குவரத்து வசதியில்லாத காட்டில் எங்களை விட்டு விட்டார்கள். எப்படியோ அங்கிருந்து திரும்ப வந்து மீண்டும் சத்தியாக்கிரகம் செய்தோம். என்ன செய்து என்ன பயன்?— எங்களைப் போன்றவர்களைப் போகிற போக்கில் சர்க்கார் விட்டுவிட்டார்கள். அதாவது போலீஸ் லாரியில் சிறிது தூரம் செல்லும் பாக்கியம்கூட இம்முறை எங்களுக்குக் கிட்டவில்லை!

இந்த ஏமாற்றத்தால் சோர்வடைந்த உள்ளத்துடன் நான் மீண்டும் வாத்தியார் வேலையைக் கவனிக்கலானேன். சிறைக்குச் செல்வதற்குக் கூடப் பணமும் பக்க பலமும் வேண்டும் என்ற விஷயம் எனக்கு அப்போது தெரியவில்லை. மூன்று மாதகாலம் வேலூர் சிறையிலிருந்து பாரிஸ்டர் பரந்தாமன் விடுதலையடைந்த பிறகுதான் எனக்கு அந்த விஷயம் தெரிந்தது.

ரயிலடியில் என்னைக் கண்டதும் பாரிஸ்டர் பரந்தாமன் முதன் முதலாகக் கேட்ட கேள்வி இதுதான்.

"நீர் எப்பொழுது விடுதலையடைந்தீர்?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் ஏற்கனவே சோர்வடைந்திருந்த என்னுடைய உள்ளம் மேலும் சோர்வடைந்தது.



நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு, "நான் சிறைக்கே செல்லவில்லையே!" என்றேன்.

பாரிஸ்டர் பரந்தாமன் என்னை ஏற இறங்கப் பார்த்தார். "என்ன! நிஜமாகவா?" என்று ஒன்றும் தெரியாதவரைப் போலக் கேட்டார்.

"ஆமாம்" என்றேன்.

அதற்குள் மோட்டாரோட்டி காரை எங்களுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினான். "ஏன், இம்முறை நீர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே பரந்தாமன் காரில் ஏறி உட்கார்ந்தார். "கலந்து கொண்டேன்; கைதுதான் செய்யவில்லை!" என்று சொல்லிக்கொண்டே நானும் அவரைப் பின் தொடர்ந்து சென்று காரில் அமர்ந்தேன்.

"என்னுடைய அனுதாபத்தைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளும்!" என்றார் பரந்தாமன் சிரித்துக் கொண்டே.

"எதற்கு?" என்று கேட்டேன்.

"உம்மைக் கைது செய்யாமலிருந்ததற்குத்தான்!"

"எப்பொழுதுமே என்னைப் போன்றவர்கள் உங்களைப் போன்றவர்களுடைய அனுதாபத்துக்கு உரியவர்களாகத் தானே இருக்கிறார்கள்?"

"அதற்குக் காரணம் நாங்களல்ல; நீங்கள்தான்!"

"எப்படி?"

"அசட்டுத்தனமாக உம்மைப் போன்றவர்கள் நடந்து கொள்கிறார்கள்; அதனால் என்னைப் போன்றவர்களுடைய

அனுதாபத்துக்கு உரியவர்களாகிறார்கள்!"

"நான் என்ன அசட்டுத்தனமாக நடந்துகொண்டு விட்டேன்?"

"என்னைக் கேளாமல் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டீரே, அந்த அசட்டுத்தனம் ஒன்றே போதுமே!"

"உங்களைக் கேட்டிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?"

"என்ன செய்திருப்பேனா? நீரும் என்னைப் போல் மூன்று மாத காலம் சிறையில் இருந்து 'தியாகி' ஆகும்படி செய்திருப்பேன்!"

"இது என்ன கூத்து! சிறைக்குச் செல்வதற்குக் கூடவா இன்னொருவருடைய தயவு எனக்கு வேண்டும்?"

"உமக்கு மட்டும் என்ன? எனக்கே இன்னொருவருடைய தயவு வேண்டியிருந்ததே!"

"என்ன!"

"மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விடாதீர்! மாஜிஸ்ட்ரேட்டின் தயவு இல்லாமலிருந்திருந்தால் என்னையும் உம்மைப் போல் தான் போகிற போக்கில் விட்டு விட்டிருப்பார்கள்!"

"நிஜமாகவா சொல்கிறீர்கள்? மாஜிஸ்ட்ரேட்டின் தயவினலா நீங்கள் சிறைக்குச் சென்றீர்கள்?"

"ஆமாம் ஐயா, ஆமாம்! நான் மட்டும் இல்லை; திருவாளர் குற்றாலலிங்கம் கூட மாஜிஸ்ட்ரேட்டின் தயவினால் தான் சிறைக்கு வந்து இருந்து சென்ற வாரம் விடுதலையடைந்து சென்றார்!"

"என்னால் நம்பவே முடியவில்லையே!"

"கண்ணுக்கு முன்னால் நடப்பதை நம்பும் வழக்கம்தான் உம்மைப் போன்றவர்களிடம் கிடையவே கிடையாதே!"

இந்தச் சமயத்தில் கார் 'காந்தி பவன'த்துக்கு முன்னால் வந்து நின்றதைக்கூட நான் கவனிக்கவில்லை. "என்ன யோசிக்கிறீர்? இறங்கும், கீழே!" என்று சொல்லிக் கொண்டே பாரிஸ்டர் பரந்தாமன் என்னுடைய தோளைப் பிடித்துக் குலுக்கினார். அப்பொழுது தான் என்னுடைய நினைவு எனக்கு வந்தது.

இருவரும் உள்ளே சென்றோம். "நான் ஸ்நானம் செய்து விட்டு வரட்டுமா?" என்றார் பரந்தாமன்.

"உங்களோடு நானும் ஸ்நானம் செய்யப்போகிறேன்!" என்றேன் நான்.

"எதற்கு?" என்று கேட்டார் பரந்தாமன்.

"காங்கிரசுக்கு!"

"ஏன்?"

"இனிமேல் என்னைப்போன்றவர்களுக்கு அதில் இடமில்லை!"

பாரிஸ்டர்பரந்தாமன்விழுந்து விழுந்து சிரித்தார். அவருடைய சிரிப்பைப் பொருட்படுத்தாமல் நான் ஸ்நான அறையை நோக்கிச் சென்றேன். (தொடரும்)

ஒருவனை ஒருவர் தேடி....!

நா. பாண்டுரங்கன்

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

கண்ணா!... நண்பனா நீ! நயவஞ்சகனா? அன்பைக் கொட்டியவன் உள்ளத்தில் அக்கிரமத்தைக் கொட்ட எண்ணுகிறாயே, அடுக்குமா இது உனக்கு? இன்பபுரியை நோக்கி இழுப்பது நானல்ல — அவள் என்பாய். ஆமாம்! அவள் தான். அது அவள் செய்யும் தவறு. அவள் தவறு செய்கிறாள் என்பதற்காக, நீ அவள் விரும்பிய படி செல்வது நீ செய்யும் தவறு! அது சமாதானமாகாது... ஒரு தவறு இன்னொரு தவறுக்குச் சமாதானமாகுமா நண்பா? உண்டாவது இரண்டு தவறுகள் தான். முடியாது என்று மறுத்து விட்டால் அவள் உள்ளம் வெடித்து விடுமே என்கிறாயா? உண்மை தான். அவள் உள்ளம் வெடிக்காவிட்டால், அவள் விருப்பத்திற்கு நீ இணங்கி விட்டால், யாரார் உள்ளம் வெடிக்கும் தெரியுமா? — அவள் உள்ளம் வெடிக்காது தான், குளிரும்! ஆனால் அதே போது, என் உள்ளம் வெடிக்கும், என் தந்தை உள்ளம் வெடிக்கும்; எங்கள் நெருங்கிய உறவினர்கள் உள்ளம் வெடிக்கும்! — வெடிக்காமல் ஓர் உள்ளம் இருப்பதற்காக, வெடிக்கச் செய்வது பல உள்ளங்களை. பல உள்ளங்கள் வெடிக்காமல் காபபாற்றப் படும், ஓர் உள்ளம் வெடிப்பதனால்... ஆகையால் பல உள்ளங்கள் வெடிக்காமல் இருப்பதற்காக, கண்ணா! ஓர் உள்ளத்தை வெடிக்கவைப்பதால், அறிவுடையவனாக மட்டுமல்ல, தியாகியாகவும் ஆகிறாய்-இதை மாற்றிச் செய்தால் நீ துரோகியாகிறாய்—கண்ணா, நீ துரோகியாவதா? கூடாது! கூடாது! நீ தியாகியாகு!! தியாகியாகு!!! ...."

இப்படி உன் உருவம் என் எதிரே பேசுவதாக உணர்ந்தேன். தடுமாறிய என் உள்ளம் தைரியமடைந்தது.

"சியாமளா! உன் விருப்பத்திற்கு நான் இணங்குகிறேன். உன் ஓர் உள்ளம் வெடிக்காது...பலரின் பல உள்ளங்கள் வெடிக்கும்—உன் உள்ளம் வெடிக்கச் செய்கிறேன் — அப்பொழுது காப்பாற்றப்படுவது, பல உள்ளங்கள். எதை நான் செய்வது, சியாமளா?..." இப்படிக் கேட்டேன், எதிரே நின்ற சியாமளாவை. ஒரு புன்னகையை வீசிவிட்டு, அலட்சியமாகப் பதிலளித்தாள். ஐயோ... அந்தப் பதில்...

"கண்ணா!... என் உள்ளமும்... அவர்கள் உள்ளங்களும்! ஓராயிரம் பூவரசன் பூக்களைப் பெற்றாலும் ஒரே ஒரு ரோஜாவை இழப்பதற்கு அவை சமமாகுமா? பல உள்ளங்கள்! பல உள்ளங்கள் வெடிக்கட்டும் மடமையால் என் உள்ளம் வெடிக்கக் கூடாது உங்கள் கடமையால்!" ...சியாமளா பேசினாள். அவள் முகத்தில் காந்தம் இருந்தது. வானத்திலிருந்து ஒளியைக்

கொட்டிக் கொண்டிருந்தது நிலவு!— விண்ணில் வெண்ணிலா. கண்ணுக்கும் கரத்திற்கும் அருகே கட்டழகி. நடுநிசி. கருத்தில் பசி ஏற்படாமல் இருக்குமா? தடுப்பார் யாருமில்லை பின் தயக்கமிருக்குமா காரியத்தில்? ‘கேட்பவர், பார்ப்பவர் அற்ற இடம்’ அதுவாக இருந்தது. ‘கேளிக்கைக்கு மிக ஏற்ற இடமாக’ மாருதா என்ன? பரம தரித்திரனுக இருந்தாலும், பார்வையைப் பறிக்கும்பலகாரக்கடை எதிர்ப்பட்டால், பசி இல்லாவிட்டால் கூட, அவைகளைப் புசிக்க வேண்டும் என்ற எண்ணம், காசில்லா விட்டால் கூட, கருத்தில் தோன்ருமல் இருக்குமா? அந்தச் சமயத்தில், கடைக்காரனே, பணிந்த பார்வையை வீசி, கனிந்த மொழியால், கரம் காட்டி அழைத்து, காசு வேண்டாம் கருதியதை எடுத்துக்கொள் என்று சொல்லவும் ஆரம்பித்து விட்டால்........., பார்த்திபா, என் நண்பா, நீ வேருெரு இடத்தில், என் நிலையில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்? வாலிபன் எவனும் என்ன செய்திருப்பான்? கல்லால் மனம் செய்து வைத்துக்கொண்டவன் தவிர, மற்ற எவனும் என்ன செய்திருப்பான்? என்ன செய்திருக்க முடியும்? அதையேதான் நான் செய்தேன். விசித்திரமான நிலையில் நான் இருந்தேன்—அன்று அதுமுடிந்தது. அதற்குப் பிறகு அதே சூழ்நிலை, இன்று மாலைதான் ஏற்பட்டது உங்கள் பங்களாவில் நான் அங்கேவந்த போது, நீ இல்லை. உன் அப்பா இல்லை... சியாமளா என்னை வரவேற்றதிலிருந்தே நான் இலைத உணர்ந்து கொண்டேன். சியாமளா என் அருகில் வந்தாள். அது ஆச்சமாகவா இருந்தது எனக்கு? இல்லை!... “பலாக்கனியில் ஒரு சுளையை எடுக்கும்வரைதான கஷ்டம், ...ஒரு சுளையைக் கஷ்டப்பட்டு எடுத்து விட்டால், மறுபடி சுலபமாக மளமளவென்று சுளைகளை எடுத்துக்கொண்டே இருக்கலாம்...”. என் அருகே வந்து நின்றுகொண்டே, இப்படிப் பேசிக்கொண்டே, சியாமளா என்னைப் பார்த்த பார்வை — எதைபபற்றியும் உலகில் எனக்குக்கவலையில்லை! என்ன நேர்ந்தாலும் அதைப் பற்றி நினைக்கவே நேரமில்லை... எனக்கு வேண்டியதெல்லாம் சியாமளா என் அணைப்பில் இருந்தாள். இது எப்படி நடந்தது, எப்போது நடந்தது என்று எனக்கே தெரியாது. சியாமளாவிற்கும் தெரியாது. என் அணைப்பில் சியாமளா இருந்தாள்! பார்த்திபா, நான் என்ன இப்படியெல்லாம் உன்னிடம் பேசுகிறேன் என்று பார்க்கிருயா? நாங்கள் அந்த நிலையில் இருக்கும் போது, அப்பா வந்திருக்கிருர் — உன் அப்பா! கண்டறியாததைக் கண்டிருப்பார், கல்லாகி நின்றிருப்பார்...... இதை அறிய எங்களுக்கு இரண்டு நிமிஷங்கள் ஆயின. நடு வீட்டிலே நாகத்தின் ஆட்டத்தைக் கண்டவன் நடுங்கித்தான் போவான். அந்த நடுக்கம் இரண்டொரு நிமிஷந்தான் இருக்கும். பிறகு ...பிறகென்ன, கையில் கிடைத்ததை எடுத்து—. நான் உன் அப்பாவின் கண்ணுக்கு நாகமாகத்தான் தோன்றியிருப்பேன், அதுவும் உயிர் குடிக்கும் நாகமல்ல, மானத்தைக்குடிக்கும் நாகம்!...... நீயும், அதே

சமயத்தில் வந்தாய், அங்கே. பிறகு நடந்தது தான் உனக்குத் தெரியுமே. விரிவாகவே எல்லாம் விளக்கி விட்டேன் என்று எண்ணுகிறாயா? இல்லை சுருக்கமாகத்தான் கூறியிருக்கிறேன்........''

●

இந்தச் சமயத்தில், கண்ணனின் காலில் ஏதோ பலமாகத் தடுக்கியது. அவன் குப்புற விழுவான் போல் ஆகிவிட்டது. ஆனால் விழவில்லை. அவன் சிந்தனை அறுந்தது. மனத்தில் அவனுக்கும் அவன் நண்பனுக்கும் நடந்த உரையாடல் உருவகம் மறைந்தது. காலைத் தடுக்கியது, என்ன என்று பார்த்தான். பாதையில் நீட்டிக்கொண்டிருந்த பெரிய கல். அவன் கால் விரலில் இரத்தம் கசிந்தது. துடைத்தான். கசிந்தது. துடைப்பதை நிறுத்தி விட்டு நடந்தான். அவன் கால்கள், அவனைக் கால்வாயின் கரையிலே கொண்டுவந்து நிறுத்தின. மரத்தடியில், மேடான இடத்தில் அமர்ந்தான். விண்ணைப் பார்த்தான். இரத்தம்!...... நாழிகை நகர்ந்து கொண்டே இருந்தது. அவன் பேசாமல் அங்கேயே உட்கார்ந்திருந்தான்...... 'கர்கர்' என்று பரிதாபக் குரலை எழுப்பிப் பறந்தது ஒரு காக்கை. இதென்ன, வேலையல்லாத வேளையில், இந்தப் பறவை இப்படிக் கத்திக் கொண்டே செல்லுகிறது. அவன் நினைத்தான், நினைத்துக்கொண்டே வானத்தைப் பார்த்தான். அதன் 'சிவந்த காயம்' ஆறிவிட்டது! நிலவு கிளம்பிக் கொண்டிருந்தது. சுரீல் என்று வலித்ததுகாலில். கால் விரலில் காயம்பட்ட இடத்தில் விரல்களால் தடவினான். வழிந்த இரத்தத்தில் பட்டுக் கலந்து மூடியிருந்த மண்ணைத் துடைத்தான். இந்தக் காயமும், இன்னும் சில நாட்களில் ஆறிவிடும். ஆனால், மனத்தில்பட்ட காயமோ? ஆறவே முடியாத காயமல்லவா? நாழிகை நகர்ந்து கொண்டிருந்தது. கண்ணன் அந்த இடத்தைவிட்டு நகராமல் அமர்ந்திருந்தான். அவன் கண்களிலிருந்து நீர் பெருகியது தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு, அவன் வெளித் தோற்றம், அமைதியின் சின்னமாக விளங்கிற்று. ஆனால் அவன் உள்ளேயோ...

அதேபோலத்தான், அதே நேரத்தில், பச்சைச்செடிகளின் நடுவே முளைத்து, பால் நிலவில் குளித்து நிற்கும் சதானந்தத்தின் பங்களா, - வெளியில் அமைதியின் விளக்கமாக இருந்தது. ஆனால் அதன் உள்ளேயோ,... ... புயலடித்து ஓய்ந்துகொண்டிருந்தது. சதானந்தம் சோபாவில் சாய்ந்து கன்னத்தில் கையைவைத்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். இரையின் மீது பாய்ந்த புலி, இரை ஓடிய பிறகு பாய்ந்த இடத்திலேயே கிடந்து, கோபம் கோபமாகக் கண்களை விழிப்பதும், வாலைச் சுழற்றிச் சுழற்றி அடிப்பதும் முன்கால்களால் தரையைக் கிறிக்கிறி அடிப்பதும், பல்லை வெளியில் காட்டிக் காட்டிப் பரிதாபமாக — உறுமுவதும் இப்படி அந்த இடத்தைவிட்டு நகர முடியாமல் கிடக்குமென் பார்களே, அந்தக் காட்சியைத்தான் ஒக்கும், சோபா


வீலே, சதானந்தம் கிடந்த காட்சி! பக்கத்தில் சியாமளா நின்றிருந்தாள். அவளுடைய ஒருகன்னம் சற்றுச் சிவந்திருந்தது. கண்ணிலிருந்து பெருகிய நீரைத் துடைத்துக்கொண்டிருந்தாள். பார்த்திபன், கையைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு, இங்குமங்கும், அங்கேயே நடந்துகொண்டிருந்தான். அப்படி நடக்கும்போது, அவன் பார்வை அடிக்கடி, சியாமளாவைவிட, அவன் தந்தை, சதானந்தம் மீதே பட்டுப்பட்டுத் திரும்பியது. சதானந்தத்தின் மண்டையில், சற்றுமுன்பு, சியாமளா வீசிய வார்த்தைகள்—வார்த்தைகளா அவைகள்? அனற்கட்டிகள் சுழன்று கொண்டிருந்தன.

"நான் இப்பொழுது, சதானந்தத்தின் மகள் அல்ல, பார்த்திபனின் தங்கை அல்ல, நான் பெண், மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் — என்னை அடிக்க எவருக்கும் உரிமையில்லை......நிறுத்துங்கள்!"

தந்தையின். கொடுமை வளரும்போல்தெரிந்தபோது, சியாமளா இப்படிக் கூறினாள். சதானந்தம் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், திடுக்கிட்டுச் சோபாவில் சாய்ந்தார், அவர் அப்படிச் சாய்ந்தற்குச் சியாமளாவின், வார்த்தைகள்மட்டுமல்ல, அதே நேரத்தில் பார்த்திபன் "அப்பா, சியாமளாவைக் கண்டிக்க உங்களுக்கு அதிகாரமில்லை........." என்று கூவிக்கொண்டிருந்ததுமாகும்!

"எனக்கு என்மகனை — மகனையா, இல்லை, மகளாக வந்து என் மானத்தை அழிப்பவளைக் கண்டிக்க அதிகாரமில்லையா?" சதானந்தத்தின் மனத்தில் இந்தக் கேள்வி, திடீரென்று எழுந்து தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சியாமளாவையல்ல, பார்த்திபனைத் தன் மகனைக் கொடூரமாகப் பார்த்தார். வெள்ளாடு என்று நினைத்தது, வேங்கையாகி நின்றால்...! பார்த்திபன் அவர் பார்வையைக் கண்டு பயந்துவிடவில்லை அது அவன் பார்வையிலிருந்தே புரிந்தது! அமைதி! அமைதி! அமைதி! அங்கே கணத்திற்குக் கணம் வளர்ந்துகொண்டிருந்தது. அமைதி அதன் முடிவை நோக்கி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.........

"சதானந்தத்தின் வீட்டில் சதானந்தத்தின் மகள்தான் இருக்கலாம்,......... 'சியாமளா சதானந்தத்தின் மகள் அல்ல அப்போ, சியாமளாவிற்கு இங்கேவேலையில்லை..." சதானந்தத்தின்வாயிலிருந்து, அவர் விரும்பாமல் இருக்கும்போதே, இந்த வார்த்தைகள் வெளியே வந்தன. சியாமளாவை அவர் இப்படிச் சொல்லிக்கொண்டே பார்த்தார். சியாமளா அங்கே இல்லை. எதிரே, பார்த்திபன் தன் இருகண்களையும் துடைத்துக்கொண்டிருந்தான். தந்தையின், இந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தான். சியாமளா அங்கே



உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

15. இதோ மதுரை—1

‘கூற்கள் கவிதை பொழியும் மதுரை மாநகரம்’ என்று ஓர் அன்பர் கூறினர். அவர் அறியார் கற்கள் எத்தகைய கவிதை பொழியுமென்று. அவரது சகாக்கள் அறியமாட்டார்கள், அக்கவிதைகள், கவிதைத் தொகுதிகள் தினந்தினம் எவ்வாறு அரங்கேற்றம் செய்யப்பட்டு வருகின்றன என்பதை.

தோழர் ஷெனாய், மதுரையைப்பற்றி எழுதியுள்ள புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். ஷெனாய் என்றதும் ஷெனாய் நகரமும், அவர் மதுரையிலே கமிஷனராயிருந்த காலத்தில் செய்த செயல்களும் என் ஞாபகத்திற்கு வந்தன. அவர்தான் வீதியின் இருபுறத்திலுமுள்ள பலகைகளை அப்புறப்படுத்தி நடைபாதைகளை விரிவுபடுத்தியவர். மகிழ்ச்சியோடு அந்நூலைக் கையிலெடுத்தேன். தலைப்பைப் பார்த்ததும் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். ‘மதுரை ஒரு கோயில் நகரம்’ இது தான் அந்நூலின் தலைப்பு! அழகான கலிக்கோ பதிப்பு! அதற்கு மட்டும் குறைவில்லை. உள்ளே அவர் காட்டுவது அத்தனையும் கற்கள்தான். இதற்குத்தானா இத்தனை பெரிய புத்தகம்! சங்ககாலம் முதற்கொண்டு இன்று சனீஸ்வரன் கோவிலைத் தம்பதிகள் சகிதமாக வலம் வரும் இந்தச் சங்கராச்சாரியார்கள் காலம் வரை, மதுரையைப் பற்றிய அளப்புகளும் கல்லும் அவை சொல்லும் ஆனந்தப் பள்ளும் அம்பலப்படுத்தப் பட்டிருக்கின்றனவேயன்றி, ஒருவராவது உண்மை மதுரையை ஆகஸ்டு வீரர்களுக்கு அரணாக விளங்கிய மதுரையைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஆகவே நான் கண்ட மதுரையை, ‘ஓர் இரவு’ மதுரையைப் பற்றி உங்களுக்குக் கூறுகிறேன்.

ஆகஸ்டு வீரர்கள் தியாகிகளாகிய பிறகு மதிப்பதற்குப் பதில் மிதித்த மதுரையை, இன்றைய “உடைந்த கிராமபோன் பிளேட்” எழுத்தாளர்கள் எழுத மறந்த, அவர்கள்

கை எழுத மறுத்த மதுரையை நான் காட்டப்போகிறேன். இதோ அந்த மதுரை!

எங்கு பார்த்தாலும் மின்சார விளக்குகளின் தீபாலங்காரம்! எத்திக்கு நோக்கினும் ஜன நடமாட்டம்! அப்போது மணி இரவு 9 இருக்கும். ஊருக்குக் கோடியிலே ஒரு சிலருக்கு மட்டும் பிடித்தமான படங்களைக் காட்டும் வாகினி டாக்கீஸிற்கு அப்பொழுது நான போய்க் கொண்டிருந்தேன். பைஜாமாக் கிலுகிலுப்பைத் தோழர்களும், கிச் கிச் செருப்புகளும், பார்வைக்கு விருந்தாகப் பதிபோடும் பாவைகளும், 'சிறுசும் பெருசுமாக' வண்டிகளும் ஒன்றன்பின ஒன்ருக என்னுடைய கண் முன்பாகச் சினிமாக் காட்சிகளைப் போல வந்து சென்றன அன்று "*The bells of St. Mayrs*" என்ற படம்! படம் ஒன்றும் பிரமாதமாக இல்லை. படம் முடிந்த பிறகு நானும் எனது நண்பர்களிருவரும திரும்பி வந்து கொண்டிருந்தோம். அங்கிருந்து ஆரம்பிக்கிறது 'நம் மதுரை'

டீ குடிப்பதற்காக அருகிலுள்ள 'தௌபிக்' ஹோட்டலுக்குச் சென்றோம். ஓட்டலில் கூட்டமில்லை. ஒரு ஓரத்தில் சென்று உட்கார்ந்தோம். குதிரை வண்டியிலிருந்து இறங்கி வந்தார்கள், இரண்டு மதுரைப் பிரபுக்கள். துணைக்கு ஒரு பணிப்பெண். அவர்கள் வந்திறங்கிய தினுசே ஒரு மாதிரியாக இருந்தது உள்ளே சென்றுள்ள குடிவகைகள், ஆவியாகி, அது வெளியே வியாபித்துப் பரவி, அவர் தம் வருகையைத் தூது சொல்ல, அரைப் போதையோடு ஆடாமல் அசையாமல் ஊர்ந்து வரும் அம்மையாரோடு அந்த இராக்கால மைனர்கள் வந்தார்கள். என் நண்பர்கள் குசுகுசுவென்று பேசினுர்கள். நான திகைத்தேன். 'நாளைக்கு மதுரையில் மதுவிலக்கு' என்றுர்கள். எனக்கு விஷயம் விளங்கிவிட்டது.

என்னவெல்லாமோ ஆர்டர் செய்தார்கள். எல்லாம் வந்தது. ஒன்றையாவது அவர்கள் ஒழுங்காகச் சாப்பிடவில்லை. அம்மையாரோ அக்கம் பக்கம் பார்த்து, அடக்க ஒடுக்கத்துடன் நிதானந் தவருமல் கொண்டு வந்த அவ்வளவையும் உள்ளே தள்ளினர். காக்டெயில் நண்பர்களோ இந்த உலகத்திலில்லை. இது தான் மதுரைத் தலத்திலே. அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் திறம்பட நடந்த மதுரையம்பதியிலே நான் என் மனதில் இருத்திக் கொண்ட முதற் காட்சி!

காட்சி மாறுகிறது. இப்பொழுது நானும என் நண்பர்களும் 'செண்ட்ரல்' சினிமாவுக்கருகிலுள்ள 'பாம்பே பீடா ஸ்டாலி'ல் பீடா வாங்கிப் போட்டுக் கொண்டிக்கிரேும். அப்பொழுது, "அய்யோ, அப்பா! அட பாவிகளா! ஒண்ணில்லாமெ அடிச்சிட்டுப் போயிட்டாங்கலே! நான் இனிமெ எப்படி ஊருக்குப் போவேன்" என்ற ஒப்பாரியும் அதைத் தொடர்ந்து ஒரு செந்தலைப் பூச்சியும சினிமாவை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தன. ஆச்சரியத்தோடு திரும்பினேன். ஒரு கொளும்பு வாசியும அவரருகில் ஒரு கான்ஸ்டேபிளும் நின்று

கொண்டிருந்தனர். 'நாம் இருவர்' பார்க்கச் சென்ற அவ்வயலூரை ஒரு உள்ளூர் பதம் பார்த்து விட்டது. காசைப்பறிகொடுத்துவிட்டுக் கான்ஸ்டேபிள்க் கடவுளிடம் கதறும் அப்பக்தனுக்கு, காசுகளை மட்டுமல்ல, தான் போய்ச் சேரவேண்டிய பிரபல கம்பெனியின் அட்ரஸையும் பறிகொடுத்துவிட்டுப் பதறியழும் அப் பரிதாபத்திற்குரிய அரிச்சந்திரனுக்கு, இனிக்கற்கள் கவிதைபொழியும் மீனாட்சியம்மன் கோவில் உண்டக் கட்டிதான் கும்பி கழுவக் கிடைக்கும் என்று நான் உணர்ந்து கொண்டேன். உண்டக் கட்டி பெறுவதற்குக்கூட உருமாறு வித்தையை அவர் உடனடியாகப் பழகிக் கொண்டால்தான் ஒரு வேளைக்காவது அதுவும் நிறைவேறும். ஊருக்குப் போக வேண்டுமென்ருலோ, நாகரிகப் பிச்சை எடுக்க வேண்டும். ஆனல் அதெல்லாம் 'அராபியன் நைட்ஸ்' சம்பவங்கள்.

வருவோர்க்கும் போவோர்க்கும் பிச்சை போடவா மதுரை மகாஜனங்கள் இருக்கிருர்கள்? அவர்களும் எதெதற்குப் போட்டுத் தொலைப்பார்கள்? கள்ளழகர் தேவஸ்தானப் பட்ஜெட்டில் துண்டு விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பெருமாள் கோவில்மாடு வருடா வருடம் பெருத்துக் கொண்டு போவதைப் போல, ஒவ்வொரு வருஷமும் உண்டியல் பெட்டியின் பருமனும் நேர் விகிதத்தில் அதிகரித்துச் செல்லுமபடி செய்யவேண்டும். இடையில்வரும் அதிதிகள், அன்னக்காவடிகள், சந்தியாவந்தன திதி சிரார்த்தங்கள் வேறு. இத்தனையும் மீறி இந்த ஏதுங்கெட்ட கொழும்புவைப் பார்க்க அவர்களுக்கு நேரமேது? அப்புறம் அவன் கதி என்ன? அப்புறமென்ன — இரண்டு நாள் மதுரையில், டவுன்ஹால் ரோட்டில் காலத்தைக் கடத்திஞல் போதும். அதற்கடுத்த தினம் எப்படி பர்ஸ் பறிபோயிற்ரோ, அப்படியே எடுத்துக்கொள்ள அவன் பழகி விடுவான். அவன் பழகிவிடுவாஞ, மதுரையே அவனைப் பழக்கிவிடும்.

பிக்பாக்கெட்டிஸத்தில் மதராஸைப் பீட்டடிக்கும் பான்குவெட் சினிமாச் சந்திப்பே! சைன் டாக்கீஸ் திருமபு சந்துக்களே! இதோ உங்கள் சங்கத்திற்குப் புது அங்கத்தினன். தள்ளி விடாதீர்கள். செந்தலையோடு நின்ருல் என்ன? அவனென்ன டாடாவா அல்லது கனவுக் கொடையாளி பிர்லாவா? அதுவும் உங்களிடையே உலவும் ஒரு சாதாரணந்தான். தள்ளாமல் ஏற்றுக் கொள்ளுங்கள். கற்கள் கவிதை பொழியும் மதுரையின் மாண்பினைக் கலைக்காமலிருப்பதற்காவது அவசியம் சேர்த்துக் கொள்ளுங்கள் — இதுதான் அந்தக் கொழும்புவாசிக்காக நான் செய்து கொண்ட பிரார்த்தனை!

இரண்டாவது கோர நிகழ்ச்சி எங்களை அவ்விடத்தை விட்டுத் துரத்தியது. மூன்ருவது சம்பவம், அதே இரவிலே அதே ரோட்டிலே நடந்தது. அது என் மதுரையைப் பூரண மதுரையாக்கிற்று.

எங்களுக்கு முன்பாக இரண்டு உருவங்கள் சென்று

கொண்டிருந்தன. ஏறத்தாழ இருபத்தைந்து வயதிற்குக் குறையாத ஒரு இளங்காளையும், பதினறைத் தாண்டாத நல்ல பக்குவம் பெற்ற பாவையும் கையோடு, கைகோர்த்து அந்த அர்த்த ராத்திரியிலே ஜாலியாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தாங்கள் ஹாலிவுட் மாலைநேர மனோகரப் பாட்டைகளில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக எண்ணம் போலும். அரவம் ஒடுங்கியிருந்த போதிலும் ஆள் நடமாட்டம் அடியோடு நீங்கி விடவில்லை. அவர்களிருவரும் நிகழ்த்திய உரையாடல் என் சிந்தனைக்கு மற்றுமொரு பெரு விருந்தைத் தந்தது. அந்த உரையாடலை அப்படியே தருகிறேன்.

'சினிமா எப்படி?'

'ரொம்ப நல்லாருந்திச்சி'

'உம்......இப்பச் சொல்லுவ! முதல்லெ நான்'

'கூப்பிடுற போது என்ன சொன்னெ'

'என்ன சொன்னேன்? அவுங்கள்லாம் தூங்கட்டும்னு சொன்னேன்?'

'எத்தனை நாளைக்கு அவுங்களைத் தூங்கப் போட்டுட்டு வருவே, என்னைக்காவது ஒரு நாள்......?'

'உங்களுக்கென்ன. அவதிப்படுகிறது நான்தானே?'

'உன்னையாரு அவதிப்படச் சொன்னு? பேசாமா......நான் சொன்னபடி......'

'அய்யோயப்பா நான் மாட்டேன். எனக்குப்பயமாயிருக்கு'

'சரி உன்னிஷ்டம்'

'உஸ்ஸ்..............கழுத்தை விடுங்கோ. அப்புறம் நான் பேசவே மாட்டேன்'

'போதுமா...நான் உனக்கு விரோதமா எதையும் செய்ய மாட்டேன்'......இன்னும் பலப்பல வினோதமான வேடிக்கை, கேலி, நையாண்டி, சோகம், சாகஸம் நிறைந்த பேச்சுக்கள்.

'உள்ளதே போதும். உலை வாய் மூடியுள்ளவரை காரியத்தைச் சாதித்துக் கொள்வோம்' என்று துணிந்த காரிகையும், 'எட்டாத பொருள் எப்படியேனும் வெளியூருக்கு ஸ்டானோடு இழுத்து விட்டால், அப்புறம் இந்திரனும் தவம் செய்வான் நம்மை நோக்கி' என்று ஏமாந்து கிடக்கும் அந்த வெளியூர் முகாமும் நடாத்தும் நாடகம் 'ஓர் இரவு' மதுரையில்தான் காணமுடியுமே தவிர, பகலிலே அவை ஒரு பட்டம்பெற்ற மாடி வீடாகவும், அடுத்த மாடி வீட்டிலே ஒரு, தனியறையில் ஒட்டிக் கிடக்கும் அட்டையாகவும், அதாவது அறுக்கப்பட்ட தாலியாகவும் தான் தென்படும்.

இப்பொழுது மதுரை என்றாலே மற்ற ஊர்க்காரர்கள் நடுங்குகிறார்களய்யா? இரவில் மட்டுமா இந்த அக்கிரமம்? பட்டப் பகலில்கூட நடக்கத்தான் செய்கிறது. ஆனால், பழம் பெருமை பேசி, பரமசிவனின் திருவிளையாடல்களைக் கூறி, பொய்யாக் குலக்கொடி வைகையைக் காட்டி இவற்றை மறைத்துவிட முடியுமா? அவைகளையெல்லாம் அடுத்த கடிதத்தில் உமக்குத் தீட்டுகிறேன்.

வணக்கம்,
வழிப்போக்கன்



17. குறவர் கண்ட காட்சி!

நொண்ட கணவனை அல்லாது கண்ட தெய்வம் ஒன்று இல்லை என்று வாழ்ந்து காட்டிய கண்ணகியிடம் நெருங்கத் தெய்வமும் அஞ்சியது. இது வியப்பினும் வியப்புத் தானே!

பொங்கி எழுந்த கண்ணகியின் கடுஞ்சினம் சிறிது சிறிதாகக் குறைந்து அவிந்து நெடுவேள் குன்றத்தில் (திருச்செங்கோட்டுமலை) கால் வைத்துக் கண்ணகி ஏறியவுடனே முற்றிலும் மறைந்துவிட்டது.

நம் முன்னோர் எத்தகைய துன்பத்தையும் ஆற்றுவிக்கும் மகத்தான ஒரு சக்தி காலத்திடமிருப்பதாய்க் கூறிய பேருண்மை கண்ணகி வாழ்விலும் மெய்யாகிவிட்டது.

நெடுவேள் குன்றத்தின் உச்சியிலே பொன் நிற வேங்கையின் தண்ணிய நிழலிலே சினமழிந்து புலனடங்கிச் சிலை வடிவாய் அசைவற்றுநின்ற கண்ணகியாரை மலைவாழ் குறவர் கண்டனர். இமை மூடாது நின்று பார்த்தனர். செய்தொழில் மறந்தனர். சிந்தை படிந்தனர். மெல்ல மெல்ல அருகே வந்தனர். 'அம்மையே' என்று அழைத்துத் தலைமீது கைகுவித்தனர். தெய்வம் தொழுத கண்ணகியைக் குறவர் தெய்வமாய்க் கருதியதில் வியப்பில்லை.

குருவி யோப்பியும் கிளி கடிந்தும்
குன்றத்துச் சென்று வைகி
அருவி யாடியும் சுனை குடைந்தும்
அலவுற்று வருவேம் முன்
மலை வேங்கை நறு நிழலின்
வள்ளிபோல்வீர் மன நடுங்க
முலை யிழந்து வந்து நின்றீர்
யாவிரோ வென

'அன்னையே, நாங்கள் தினைப்புனத்தில் கதிர்கவர ஓடிவரும் குருவிகளை ஓட்டுவோம். கவண் கொண்டு கிளிகளை விரட்டுவோம். அருவிபோய் ஆடுவோம். சுனையிலே குளித்து நீர் குடைந்து விளையாடுவோம். இப்படிப்பட்ட எங்கள் முன்னே நாங்கள் அஞ்சி நடுங்

குமாறு ஒரு முலையிழந்து நிற்கின்ற நீ யார்? எங்கள் கண்ணுக்கு என்னவோ வள்ளியம்மைபோலக் காணப்படுகிருய். யாரென்று சொல்'எனக் கேட்டு மறுமொழி பார்த்து நின்றனர் குறவர்.

கண்ணகியைக் கண்டவுடனே தெய்வத்திற்கு ஒப்பான ஒரு உள்ளுணர்ச்சி குறவர்கட்கு ஏற்பட்டுவிட்டது. அவள் வடிவுகண்டு அஞ்சினர். ஆனுல் அதில் அறிவிழந்து போகவில்லை. அதைத்தெளிவாய்க் காட்டி நிற்கிறது அவர் பேசியபேச்சு. எடுத்தஎடுப்பிலே 'நீ யார்'என்று அவர்கள் கேட்கவுமில்லை. தம்மை அறிமுகம் செய்துகொண்டு அவளை அறிந்துகொள்ள ஏற்பட்ட தம் ஆசையை வெகு நயமாய் வெளிப்படுத்தினர்.

தம் குடிவந்த வள்ளியம்மை போலக் காணப்படுவதாய் மெல்லக் கூறினர். கூற உறவும் அறிந்துகொள்ளத்தக்க உரிமையுமிருப்பதாய்க் குறிப்பால் புலப்படுத்தியுள்ளனர். இங்கே இளங்கோ குறவர் பேச்சிலும் திருந்திய நாகரிகத்தையும் செறிந்த யூகத்தையும் சேர்த்து எண்ண வைக்கிருர். குறவர் கேட்ட கேள்விக்குக் கண்ணகி சிறிதளவும் சினமின்றி

.... முனியாதே
மணமது ரையோடு அரசு கேடுற
வல்வினை வந்(து) உறுத்த காலை
கணவனை யங்(கு) இழந்து போந்த
கடுவினை யேன் யானென்ருள்

கணவன் கொலைப்பட்ட காரணத்தால் மன்னனெடு மதுரையை அழித்த தீவினையேன் என்று கூறும் கண்ணகியின் சொற்களிலே சொற் சுருக்கமும் பொருட் பெருக்கமும் அமையக் காணுகிருேம். இதனுல் மகளிர்குலம கண்டறியாத ஆற்றலனைத்தும் கண்ணகியிடமிருந்தமையை ஆசிரியர் புலப்படுத்துகிருர்.

இக் காவியக் கதை செல்லும நெறியிலே கண்ணகியை நீ யார் எனக் கேட்டு அறிந்து கொள்ள விரும்பியவர் இருவர். 'நீர்வார் கண்ணை என் முன் வந்தோய் யாரையோ' எனருன் பாண்டியன்; 'முலை இழந்து வந்து நின்றீர் யாவிரோ' என்றனர் குறவர். பாண்டியன் வாக்கிலே தானொரு அரசன் என்ற பெருமிதமும், தன் ஆட்சியுட்பட்ட குடியினள் கண்ணகி என்ற இயல்பான எண்ணமும் இருக்கக் கண்டோம். அதே கண்ணகி பிறகு வீரபத்தினியாகி குறவர் உள்ளத்திலே அச்சத்தை எழுப்பி அவர் வாக்கிலேவந்த வார்த்தையால் வழிபடத்தக்கதெய்வமாய் விளங்குகிருள். பாண்டியன் 'நீ யார்?' என்று கேட்ட பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் மதுரை மக்கள் எல்லோருக்கும் கண்ணகியைக் கண்டு அப்படி ஒரு கேள்வியைக் கேட்க வேண்டிய அவசியமில்லாமற் போய்விடுகிறது. ஆனுல் அதே கேள்வியைக் கேட்க வேண்டிய அவசியமோ கண்ணகிக்கு "யாவரை நீ என் பின் வருவோய்" என மதுரைத் தெய்வத்திடம் ஏற்படுகிறது.

'பாண்டியன் நீ யார்?' என்ற பொழுது வந்த விடையிலே சினம் பொங்கியது. மலைவாழ் குறவர் 'யாவிரோ?' என்ற போது சினம் தணிந்துவிட்டது. இவ் வினுக்களுக்கு

எழுந்த விடைகள் இக் காவியக் கதையின் உயிர் நாடியாய் இருந்தமையை நாம் அறிந்து வருகிறோம்.

மலைவாழ் குறவர் பின்னும் வணங்கினர். மலர் மழை பொழியக் கண்ணகி கணவனொடு மறையக் கண்டனர். கண்கண்ட தெய்வம் இக் கண்ணகியே என வழிபட்டனர்.

சிறுகுடியீரே சிறுகுடியீரே
தெய்வங் கொள்ளுமின்
சிறுகுடியீரே
நிறங்கிளர் அருவிப்
பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை
நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின்
சிறுகுடியீரே

குறவர்கள் அச்சம் தெளிந்தனர். ஆவேசங்கொண்டனர். ஊரையே ஒன்றாகத் திரட்டினர். "இவளைத் தெய்வமாகக் கொள்ளுங்கள்! அருவி பாய்கின்ற பறம்பிலே, வேங்கை நிழலிலே வந்துநின்ற இவளைத் தெய்வமாகக் கொள்ளுங்கள்" எனப் பெரு முழக்கம் செய்தனர்.

குறிஞ்சி நிலத்திற்குரிய பறையைமுழக்கினர். கொம்பை ஊதி, மணியை அடித்தனர். குறிஞ்சிப் பண்பாடினர். நறும் புகை எழுப்பி வற்றாவளஞ் சுரக்கப் பூப்பலி செய்து விழா வெடுத்தனர்.

துன்பம்வந்த நாளிலும் இன்பம் எய்திய பொழுதிலும் பண்டையோர் குரவையாடும் இயல்பினர் என்பதை ஆய மகளிர் ஆடிய குரவையாலும் மலைவாழ் குறவர் இனி ஆடும் குரவையாலும் உணரலாம். இனி குறமகளிர் ஆடிப்பாடிய குரவைப் பாடல்களைக் காண்போம்.

மலையருவியில் ஆடிவருவோம் என்று சொல்லித் தலைவி தோழியை அழைக்கிறாள். மரச்சூழல்களிலே தலைவன் மறைந்து நிற்கிறான். அதை நுணுக்கமாய்த் தலைவி அறிந்துகொண்டு அவன் காது கேட்கச் சொல்லுகிறாள்.

ஆடுதுமே தோழி!
ஆடுதுமே தோழி!
அஞ்சலோம் பென்று
நலனுண்டு நல்காதான்
மஞ்சுசூழ் சோலை
மலையருவி ஆடுதுமே!

'அஞ்சாதே' என்று சொல்லி நம்மைத் தேற்றாமல் நம் அழகை நுகர்ந்து பராமுகமாய் இருந்துவருகிறான் தலைவன். இது அவனது மலையருவியே எனினும் நீராடுவோம்' எனத் தோழியை அழைக்கிறாள்.

தலைவனிடம் நேரில்சொல்ல முடியாத ஒன்றை அவன் காது கேட்க மறைமுகமாய்க் கூறிவிட்டதில் தலைவிக்கு உள்ளூற உவகைதான். ஆனால்

....



ஜோஸ்யர்: ஓய் உமக்குச் சீக்கிரமே பிரமாத அதிர்ஷ்டம் வரப்போகிறது காணும்!

அவன்செய்த தவறுக்குஅவன் நாட்டு மலையருவியை வெறுக்க அவள் விரும்பவில்லை, நியாயமு மில்லையல்லவா? 'ஆடுதுமே தோழி, ஆடுதுமே தோழி' என்று அடுத்தடுத்துச்சொல்லி அவள் அழைக்கும் சொற்க ளிலே உண்டாகும் ஆர்வந் தான் அந்த அருவியினும் வேகமாய் வெளிப்படுகிறது. அவனிடத்து அவள் கொண்ட காதலோ அந்த மலையினும் மாணப பெரிதாய் உருக் கொள்கிறது. மேலும் தலைவி பேசுகிருள்.

அவர் மலைக்கண் பூக்க ளோடு கலந்துவந்த புதுப் புனலோடு புலந்துகொள்ளும் படியாக அதனிடத்துச் சிறு பிழையும் நான் காணவில்லை என்ருள் 'தலைவி.

'பிறகு நீ கண்டது தான் என்ன? கொண்டவருத்தந் தான் யாது?'என்ருள் தோழி. அதற்கவள் கூறுவதைப் பாருங்கள்:-

போதாடிவந்த புதுப்புனல்
மற்றையார்
மீதாடின் நோம்தோழி
நெஞ்சன்றே

"ஆனல் அவ்வாறுமலரோடு கலந்து வந்த புதுப்புனலிலே மற்றைப் பெண்டிர் மூழ்கி எழுந்தால் மனம் என்னவோ வருந்துகிறது தோழி" என்கி ருள்.

தலைவனிடம் தனக்குள்ள அன்புரிமையை இதனிலும் சிறக்கத் தலைவியால் எங்ஙனம் கூறமுடியும்? மலையும் அருவி யும் அதில் மூழ்கி எழத்தக்க முழு உரிமையும் தனக்கன்றிப் பிறர்க்கில்லை என்ற அவள் எண்ணத்திற்கு மாருகப் பிற மகளிர் அதில் நீராடினல் அவள் மனம் வருந்துகிறதாம்! இதைக் காது குளிரக் கேட்கி ருன் தலைவன். அவன் நாட்டு அருவியினிடத்து இத்தனை அன்பானல் அவனிடத்து அவள் கொண்ட காதலை நம் மால் அளவிட்டுக் கூற முடி யுமா?

தலைவியை மணம் முடிப் பதிலே தலைவனுக்குக் காலம் நீண்டுகொண்டே போகிறது. தலைவனை நினைத்து நினைத் துத் தலைவி துரும்பாய் மெலிந்து போகிருள். மலை நாடனை நினைத்து மகள் மெலி வதை அறியமாட்டாத அன்னை 'தெய்வம் திண்டியதோ, திவினை புகுந்ததோ' என அறிய மாட்டாதுபூசாரியைஅழைத்து நோய்நீக்க முயலுகிருள். இதை அறிந்த தலைவி தோழியை நோக்கி

செறிவளைக்கை நல்லாய்
இதுநகை யாகின்றே
வெறிகமழ் வெற்பனேய்
தீர்க்க வரும்வேலன்.
வேலன் மடவன்
அவனினும்தான் மடவன்
ஆலமர் செல்வன்
புதல்வன் வருமாயின்

'தோழி! இது சிரிப்பிற்கிட மாகிவிட்டது. மலைநாடனல் வந்த காதல் நோயைத்தீர்க்கப் பூசாரியாகிய வேலன் என்பான் வருவானும். அப்படி அவன் வந் தால்அறிவற்றவனுவான் இல் லையா?நோய்க்கானகாரணத்தை அறியாது கந்தன் (சிவன் மகன்) அப்பூசாரி மேல் வருவா ஞனல் அப்பூசாரியைப் பார்க் கிலும் அவன் அறிவில்லாத வனேயாவான். ஏனெனில் மலை நாடன வருகை புரிந்தால் இந் நோய் நீங்கும். வேலன் (பூசாரி) வெறியாட்டினலும், முருகன்

வெறிக்களம் வருவதாலும் இது தீராதே தோழி!' என்று பேசிய தலைவியும் தோழியும் முடிவில் பத்தினியாகிய கண்ணகியைப் பாடிப் பரவுகிருர்கள.

பாடுகம்வா வாழி
தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக்
கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை
ஏத்தியாம் பாடுகம்

"தோழி நாம் பாடுவோம். அரசுபிழைத்து அநீதி இழைத்தமையால் மாடங்கள் நிறைந்த மதுரையை மன்னனெடு அழித்த கண்ணகியைப் போற்றி நாம் பாடுவோம்' என்ருள் தலைவி.

தீமுறை செய்தாளை
ஏத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன்
மணவணி வேண்டுதுமே!

'அவ்வாறு அவளை நாம்பாடி வழிபடும்போது மலைநாடன் வந்து நம்மை மணம் முடித்துப் போக வேண்டுவோம்' என்ருள் தோழி! எப்படி?

தான் வேறு தலைவி வேறு என்ற உணர்வில்லாத காரணத்தால் தோழி நாம் என்றே தன்னையும் தலைவியோடு உளப்படுத்திக் கூறுகிருள். இவ்வாறு இருவரும் பாடிய பண்ணை பேசிய சொற்களைச் செவி குளிரச் சிந்தை குளிர மறைவிலிருந்து கேட்ட தலைவன் விரைவிலே வந்து மணம் முடித்துக் கொள்ளுகிருன்.


மலைவாழ் வேடர் மகளிர் இங்ஙனம் குரவைக் கூத்து ஆடிய பிறகு முடிவிலே தம் சேர வேந்தர் நீடுவாழ வாழ்த்தி முடித்தனர்.

கலையுலகம்

'கன்னியின் காதலி'

"தமிழ்ப் பேசும் படத்திற்கும் காட்சியமைப்பிற்கும் வெகுதூரம்" என்று தமிழ் நாட்டுச் சினிமா இரசிகர்களில் ஒரு சாரார் அடிக்கடி சொல்லுவார்கள். அவர்களுக்குக் "கன்னியின் காதலி" நன்ருகத் திருப்தியளிப்பாள். ஏன் — அவர்கள் திகைக்குமளவுக்குக் கூடத் திருப்தியளிப்பாள். 'வேலைக்காரி'யில் தங்கள் திறமையை வெளிப்படுத்திய ஜுபிடர் பிக்சர்ஸார் இப்படத்தின் மூலம் அதை உறுதிப்படுத்தியிருக்கின்ருர்கள்.

கதை ஷேக்ஸ்பியரின் கதையைத் தழுவியது. வேண்டாத பகுதிகளைக் கூடியவரை ஒதுக்கியது பாராட்டத் தக்கது. கலைமணிக்கும் மேகலைக்கும் தொடர்பேற்படுத்தும் விதம் நன்ருக அமைந்திருக்கின்றது. சேனுபதி அரசனை வஞ்சித்துப் பதவியைப் பெறுகிருர் என்பதை மூலக் கதையோடு சேர்த்துள்ளார்கள். இச்சேர்க்கை இடைவேளைக்குப் பின்பு கதையின் சுவாரசியத்தை அதிகப்படுத்தினுலும், படம் தொடங்கிய முதல் அரை மணி நேரம் வரை ஆமைவேகத்தில் கதை செல்வதற்கு, இதுதான் காரணமாகின்றது.



"கன்னியின் காதலி" என்றவுடன் நமக்கு முதலில் நினைவுக்கு வருவது காட்சியமைப்புக்கள் தாம். இராம்நாத்—சேகரின் திறமை காட்சியமைப்பின் ஒவ்வொரு அணுவிலும் ஒளிவிடுகின்றது. புயலடித்துக் கப்பல் மூழ்கும் காட்சி மிக நன்ருக எடுக்கப்பட்டுள்ளது.

காட்சியமைப்புக்கு அடுத்தபடியாகச் சொல்லக் கூடியது வசனம். 'வேலைக்காரி'யின் வசனத்தை மிகச்சிறந்தது என்று சொன்னுல் 'கன்னியின் காதலி'யின் வசனத்தைச் சிறந்தது என்று சொல்லலாம். வசனத்தில் நகைச்சுவை நல்ல இடத்தைப் பெற்றுள்ளது. காதல், கலை, அழகு, உருவம், நடனம் ஆகியவற்றிற்கு விளக்கங்கள் கொடுப்பது நன்ருக இருப்பினும் அதிகமான அளவிலிருப்பது மனதிற்குச் சலிப்பை உண்டாக்குகின்றது.

நடிப்பைப் பொறுத்தவரை பரவாயில்லை என்று தான் சொல்லத் தோன்றுகிறது. ஏனெனில் முக்கியமான ஆண் நடிகர் இருவர் (நடராசன், இராம்சிங்) அவ்வளவு நன்ருக

நடிக்கவில்லை. நடராசன் இன்னும் நடிப்புக் கலையில் கற்றுத்தேற வேண்டும். இராம் சிங்கின் சொல் உச்சரிப்பு பல இடங்களில் சரியாயில்லை. மாதுரி தேவி ஆண் வேடம் பூண்டு நடிக்கும் பொழுது அவரது நடிப்பு நன்கு சோபிக்கின்றது. அஞ்சலி தேவியின் திறமையையும் நன்கு பயன் படுத்தியிருக்கிறார்கள்.

நடனங்கள் எல்லாம் புதுமையானதாகவும் ஆனால் அதே சமயத்தில் நன்றாகவும் இருக்கின்றன. பாம்பு உடல் போன்று அமைந்துள்ள இடத்தில் அஞ்சலி தேவி நடனமாடும் காட்சி கண்ணைப் பறிக்கின்றது. பாட்டுக்கள் கருத்துச் செறிவுடன் மக்களைக் கவரும் முறையில் அமைந்துள்ளன. இடைவேளைக்கு முன்பு சில பாட்டுக்களைக் குறைத்திருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும். ஒலிப்பதிவும் ஒளிப்பதிவும் கச்சிதமாய் அமைந்துள்ளன.

சுருங்கச் சொன்னால், புதுமையான நடனங்கள், அருமையான வசனம், கண்ணைப் பறிக்கும் காட்சியமைப்புகள், சுவாரசியமான கதைப் போக்கு ஆகியவை நம்மைக் 'கன்னியின் காதலி'யின் காதலர்களாக்கி விட்டன. தமிழ்ப் பேசும்பட வரலாற்றில் 'கன்னியின் காதலி' ஒரு முக்கியமான பகுதி என்றால் அது மிகையாகாது.

— பழ. சுப. மணியன்

வளரும் இலக்கியம்

புதுவாழ்வு (தமிழ் வார இதழ்)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைத் தாங்கி வெளிவந்திருக்கிறது, புதுவாழ்வின் முதல் இதழ். மூன்று மாத ஓய்வுக்குப் பிறகு கழகத்தில் புதுவாழ்வு அரும்பும் இந்நிலையில் 'புதுவாழ்வு' மலர் தோன்றியது போற்றத் தக்கதே. புதுக்கட்சியின் தோற்றம், துவக்கம் பற்றிய செய்தி விளக்கங்களும், அண்ணாவின் அறிக்கையும் முதல் இதழ் முழுவதையும் சுவை மணக்கச் செய்கின்றன. அடுத்த இதழிலிருந்து, பல பகுதிகளுடன் வரும் என ஆசிரியர் கூறுகிறார். வரவேற்கிறோம். இப்பத்திரிகைக்குத் தோழர் ஈ. வே. கி. சம்பத் பொறுப்பாசிரியர், தோழர்கள் க. அன்பழகன், பூ. கணேசன், இரா. செழியன் ஆகியோர் ஆசிரியர்கள். தனி இதழ் விலை 2 அணா. ஆண்டுக் கட்டணம் ரூபாய் 6. புதுவாழ்வு, 34, வன்னியர் தெரு, கிருஷ்ணாபுரம் கோடம்பாக்கம் சென்னை—24.

திருக்குறள் இசைப்பாடல்கள்

திருக்குறள் கருத்துக்களைக் கொண்ட இசைப்பாடல்களின் தொகுப்பு இந்நூல். அறத்துப் பாலில் உள்ள அதிகாரம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பாடல், ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு குறளை அமைய யாக்கப்பெற்றுள்ளது.

இதுவரை சொற்பொழிவுகள் மூலமும் நாடகங்கள் மூலமும் மட்டுமே திருக்குறள் சிறப்பும், கருத்துக்களும் பரப்பப் பெற்று வந்தன. இசை மூலமும் பரப்பும் ஒரு வழியை இந்நூல் இயற்றியதன் மூலம் பாவலர் தொ. ப. வேலாயுதசாமி காட்டிவிட்டார். ஆங்காங்குத் தமிழ்க் கச்சேரிகள் நடத்தும் இசையறிஞர்கள் இப்பாடல்களை இசைப்படுத்திக்கொண்டு தமிழ்ப் பெருமையை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். தமிழிசைக் கழகங்கள் இதுபோன்ற நூல்கள் வெளிவரப் பல்வகையாலும் ஆசிரியர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கூற விரும்புகிறோம். இதை வெளியிட்ட தென்றல் நூற் பதிப்புக் கழகத்தாரைப் பாராட்டுகிறோம். இதன் விலை அணா எட்டு. தென்றல் நூற்பதிப்புக் கழகம் சலகண்டபுரம், சேலம் மாவட்டம்.

இல்லற மாண்பு.

அறிஞர் கா. அப்பாத்துரை, க. அன்பழகன், புதுவைச் சிவம், வித்துவான் வி. அ. அரங்கசாமி, மு. கருணாநிதி ஆகியோரின் கருத்தோவியத் தொகுப்பு—பாப்பம்மை—

கலியாணசுந்தரம் நினைவு மலர்-விலையில்லா வெளியீடு—ஒற்றுமைப் பதிப்பகம் - காரைக்கால்.

புரட்சிக் கவி பாரதி.

இனிய எளிய எண்சீர் விருத்தங்களில், பாரதியாரின் மேன்மை பற்றிக் கூறும் கருத்துக்கள் அடங்கியது இந்நூல். சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும் அளவில் அழகாகப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. பாரதி பக்தர்கள் வாங்கிப் படிக்கவேண்டிய புத்தகம். ஆசிரியர் சாமி பழனியப்பன், பைந்தமிழ்ப் பண்ணை, காரைக்குடி. விலை 2 அணா

—வேத்தரசன்

வரப்பெற்றோம்

அனாதைகள்

ஆசிரியர்: என். இ. பாலகுரு ஔவையார்பதிப்பகம், ஈரோடு, விலை 8 அணா.

கலைக்கோயிலா? விபசார விடுதியா?

ஆசிரியர்: சேரன். கலைப் பண்ணை. சூளை, சென்னை 7. விலை 4 அணா.

தீ *(மாதமிருமுறை)*

ஆசிரியர்: வ. சுந்தரம். 13, பச்சரிசிக்காரத் தெரு-3. மதுரை. விலை 2 அணா.

தலைவரே, பதிலுண்டா?

கே. தங்கராஜ் எழுதியது. புதுமைப் பண்ணை. அலங்காநாதபுரம் ரோடு. மணிக்கூண்டு P. O. திருச்சிராப்பள்ளி: விலை 5 அணா.

ராமபாணம் *(மாதமிருமுறை)*

ஆசிரியர்: கே. சீனிவாஸ். 10 உட்ஸ் ரோடு, சென்னை-2. விலை 4 அணா

திராவிட முன்னேற்றக் கழகம்

புதுக்கோட்டை நகரக்கிளை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதுக்கோட்டை நகரக் கிளை 2-10-49 மாலை 5-30 மணிக்குப் 'பொன்னி' அலுவலக மாடியில் அமைக்கப்பட்டது. கீழ்க்கண்டபடி செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— அரு. பெரியண்ணன், துணைச் செயலாளர்:— தே. நாராயணன், பொருள் உறுப்பினர்:— க. ஞானமுத்து, விளம்பர உறுப்பினர்கள்:— கு. அய்யாமணி, எஸ். முத்துவேல்.

ஏனைய செயற்குழுவினர்கள்:— எஸ். வி. சுப்பையா, ரா. அருணாசலம், வி. தமிழ்ச்சேரன், ரா. கணபதி, எஸ். ஏ. உலகநாதன், வி.கே. கந்தசாமி, மு. வேலாயுதம், கே. கோபால், முருகு சுப்பிரமணியன், பி. நாராயணசாமி.

பின்னர், தோழர்கள் முருகு சுப்பிரமணியன், தமிழ்ச்சேரன், க. ஞானமுத்து, வி.கே. கந்தசாமி, மு.வேலாயுதம் ஆகியோர் கழக நடைமுறைபற்றி விளக்கிப்பேசினர். செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN